அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

மலர்: 7
இதழ் 4
விலை அ. 4

மன்மத ௵ ஆடி ௴
ஜுலை—ஆகஸ்டு—1955

வருட
சந்தா
ரு. 2-4-0



சங்கரன் பணிக்குச் சந்தனக்கட்டை கிட்டாமல்,
தன் முழங்கையையே உபயோகித்த மூர்த்தியார்.

(பெரிய புராணச் சித்திர விளக்கம் 16. பக்கம் 185)

பொருளடக்கம்

			பக்கம்
1.	ரஸானுபவம்	(திருப்புகழ்மணி)	... 144
2.	திருக்கழுக்குன்றம்		... 148
3.	நடமாடும் நம்பன் (சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.)		... 149
4.	ஸ்ரீ ஜயதேவர்	(ரா)	... 155
5.	ஆத்ம போதம் (திரு நா. பிச்சுமணி திரு கி. சுப்பிரமணியன்)		... 158
6.	தியாக சிகரத்திலே	(ஆ. கி. ரங்கராஜன்)	... 163
7.	மங்களா சாஸனம்	(அன்பன்)	... 170
8.	திரிபுரம்	(V. R. G.)	... 173
9.	தரும சீலர்	(ரசபதி)	... 177
10.	மூர்த்தி நாயனர்	(கி. வா. ஜ.)	... 185
11.	மதிப்புரை		... 189
12.	The Sacred Thread	(*Thiruppugal Mani*)	... 190

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ முதல் பங்குனி மீ முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு இலங்கை உள்பட, ரூ. 2—4—0. நான்கு வருடச் சந்தா ரூ. 8—4—0. அயல் நாடுகளுக்கு வருடச் சந்தா 4 ஷில்லிங்குகள். நான்கு வருடச் சந்தா 15 ஷில் லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னமேயே மன்மத ஆண்டிற்கு உரிய தங்கள் சந்தாத் தொகை 2—4—0ம் அனுப்பினல் தொடர்ந்து பத்திரிகை அனுப்பப் பெறும். வருஷத்தின் நடுவில் சந்தாச் செலுத்தினல், முன் பகுதிகள் கைவசம் இருப்பதை உத்தேசித்து, சந்தாதாரர்களாகச் சேர்க்கவோ மறுக்கவோ நேரும். ஆகையால், ஆண்டு பிறப்பதன் முன் சந்தா செலுத்துவதே நலம்.

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை.

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

மலர் 7	மன்மத ௵ ஆடி மீ ஜுலை—ஆகஸ்ட் - 1955	இதழ் 4

ரஸானுபவம்

(திருப்புகழ் மணி)

கடவுள் ரஸமுகமாய் அமைந்துள்ளார் இவ்வுலகில். ராஸக்ரீடையின் அநுபவத்தைக் கோபிகளுக்குக் கொடுத்த க்ருஷ்ண பரமாத்மா தத்வோபதேசமாகக் கீதையை அர்ச்சுனனுக்கு ஈந்தார். உபதேச முகமாய தத்துவ விளக்கம்தான் அனுபவ முகமான ராஸக்ரீடையும். அநுபவம் இல்லாத ஞானம் ஏட்டுச் சுரைக்காய். கரிக்கு உதவாது என்பர்.

ராஸக்ரீடை நடந்ததும் நடக்கிறதும் ப்ருந்தாவனத்தில்தான். ஈச சம்மதமான எல்லா நற்குண

சீவேசுர செகத்தைச் சித்தொன்றாத் தோற்றுவிக்கப்
பாவனையாற் போதித்துப் பற்றுகின்றாய் நெஞ்சகமே.

கூட்டங்களையும் ஒரே யிடத்தில் இருப்பதாக எண்ணும் போது அதே ப்ருந்தாவனம் என்று தேறலாம். எண்ணரிய ரஸங்களாய், பகவான் உலகெலாம் புகுந்து, ஒரு இடம்கூட விடாது எங்கும் நிறைந்த பரம் பொருளாம் க்ருஷ்ண பரமாத்மா, அந்த தெய்வீக ரஸத்தின் ஓர் வெளிரூப தரிசனம்தான். ஒன்றுக்கொன்று இசைந்து இருப்பதே ரஸம். ரஸமில்லையேல் லயமுமில்லை. எல்லா வஸ்துக்களும் எந்த தத்வத்தில் லயம் அடையுமோ அதுவேதான் கடவுள். இசையை, பக்தி பண்ணுவதற்கு ஒரு பெரிய சாதனமாக வகுத்துள்ளார் பெரியார்கள். வைகுண்டம், கைலாஸம் இவையெல்லாம் மானிட சரீரத்திலேயே இருப்பதாகவும் உபதேசிப்பார்கள். ஈசன் உள்ளத்தில் குடிகொண்டு விட்டால், தேகமல்லவோ தேவ உலகமாய் விடுகின்றது. சப்த சமுத்ரம், சங்கீத சமுத்ரம் அல்லது இசை சமுத்ரம், பாவ சமுத்ரம், காலத்தையே அளவு கண்ட தாள சந்த சமுத்திரங்கள், பண் பாடல்களாகக் காணப்படுகின்றன. இதற்குள் அன்புடன் பக்தியாய்ப் புகுந்து அனுபவிக்குங்கால், பரிபூர்ண லய அனுபவம் ஏற்படுகின்றது. ஐம்பொறிகளும் அடங்கி, வெளி யுலகை மறந்து, மானிடன் தன்மயமாய் விடுகின்றான். இதைச் சுலபமாகக் கைகூட்டும் விதம் பக்தி என்று உபதேசித்தார். இடை விடாமல் ஆண்டவனைப் பாடிக்கொண்டு, கடவுளை எல்லாவற்றினும் மேலான பொருளெனக் கருதி, ஊன்றிய நம்பிக்கையோடு வழிபட்டுக் கொண்டேயிருப்பர் என் பக்

மெய்யுருவை நாளும் விரும்பாதிருந்த இந்தப்
பொய்யுருவால் பட்ட துயர் போதாதோ நெஞ்சகமே.

தர்கள் என்ருர் கண்ணன். மனோராஜ்யத்தில், ஆத்மப் ப்ரதேசத்தில் ராஸக்ரீடையின் அனுபவம் ஏற்படும். பக்தியின் திறத்தினுல், ஆண்டவன் காதலால் மாத்திரம்தான், ஆண்டவன் அனுபவம் தெரிந்துகொள்ள முடியும். ப்ருந்தாவன ப்ரதேசத்திற்குச் செல்லும் வழி கீதையில் உபதேசிக்கப்படுகிறது. அவ்வழி நடப்போர் கடையில் ஈசனோடு கலந்து உய்ந்த சுகத்தைப் பாகவதம் கூறுகின்றது.

வின் கலந்து நின்ற ஜோதி
 மேலை வாசலைத் திறந்து
கண்களித்த உள்ளுளே
 கலந்து புக்கு நின்றபின்
மண்பிறந்த மாயமும் மயக்கமும்
 மறந்து போய்
எண் கலந்த ஈசனோடு இசைந்து
 வாழ்வ துண்மையே

அருணகிரியார் திருப்புகழ்களில் கூறுவதும் இதுவே. இதயத்தை ப்ருந்தாவனமாக்கி, உலகெலாம் ஆண்டவன் அம்சமென்று அன்பினுல் இசைந்து, உள்ளே கண்டுகொண்ட பக்தர்கள் பக்தியின் ரஸமதானவும், எல்லா ரஸமும் இசைந்த ஒன்ருய் நிற்கும் தெய்வத்தின் ரஸத்தை, அனுபவத்தில் உணர்வார்கள் என்பர் தாயுமானுர்.

ஆமை உறுப்பை யடக்குதல்போல் காண்பவையாம்
தீமைதனிற் புலனைச் சேர்க்காதே நெஞ்சகமே.

திருக்கழுக்குன்றம்

ஹர ஹர ஹர ஹர, ஹரே முராரே!
ஹரி ஹரி ஹரி ஹரி ஹே த்ருபுராரே.!!

சிவனடியார் திருக்கூட்டத்தினர் ஜூன் மாதம் 23உ யன்று அமோகமாய்க் கூடி திருக்கழுக்குன்றத்தில் திருப்படித் திருவிழா நடத்தினர். படிகளில் அருந் தொண்டர்கள் நிரம்பி இருந்தனர். பக்தியின் படையெடுப்பு. மலையுச்சி கைலாஸம். சிவநாமங்கள் அணுகுண்டுகள். ஆங்காங்கே தேவார ஸ்தோத்திரங்களும் விளக்கங்களும். படிகளை யெல்லாம் பக்த

கணங்கள் மூடிவிட்டனர். மலேய மாருதமும் தென்றலும் உலவியே உடன் வந்தன. சூரியன் வெப்பத்தை வருணன் தணித்து விட்டான். தாய்மார்கள் போட்டி போட்டுக் கொண்டு படிக்குப்படி நைவேத்தியம் கற்பூர ஜோதி சமர்ப்பித்து வந்தனர். சிவ உத்க்ருஷ்டமான இந்த நிகழ்ச்சி, உச்சியில், அதாவது மலே யுச்சியில், நாளின் கால உச்சியில், சிவனடியார்கள் உணர்ச்சி உச்சியில் முடிவடைந்து தரிசனம் செய்து அன்பர் கூட்டம் திரும்பியது. இரண்டு கழுகுகளும் சந்திர சூரியர் போலும், சிவசக்தி போலும் வந்து கன்னலுண்டு ஆசீர்வதித்தன. இந்த நிகழ்ச்சியை நடத்திய மேன் மக்கள் நீடுழி வாழ்க.

சத்தோ(டு) அசத்தும் சதசத்தும் ஆகாத
சித்தம் பலவாம் ஜெகம் பொருளோ நெஞ்சகமே.

நடமாடும் நம்பன்

(சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T)

சிதம்பரச் சிறப்பு: (106-ஆம் பக்கத்தொடர்ச்சி)

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன், அந்தச் சொந்த நிலையான சொரூப நிலையை விட்டு, நிலவுலாவிய நீர்மலி வேணியனுய் அருள் திருமேனி கொண்டு வரும்போது, ஐந்தொழிலால் அண்ட சராசரங்களை இயக்குவிக்க அம்பலத்தையே ஆடரங்காக வெளிவளர் தெய்வக் கூத்தினை விரும்பிச் செய்கிருன். இறைவனுக்கு வேதண்டமே புயங்கள்; விண்ணே திருமேனி. அவ் விறைவன் ஆடற் கமைத்துள்ள அம்பலமோ சிற்றம்பலம் என்ருல், "பெருமானே! நின் ஆடலுக்குப் பற்றுமோ சிற்றம்பலம்?" என்ருெரு பக்திமான் ஐயப்பட்டார். ஆனுல் சிற்றம்பலம் சிதம்பரத்திலல்லவா உள்ளது! சிதம்பரம்—சித் என்னும் ஞான மயமான அம்பரம்—ஆகாசம் அன்ருே? ஞானுகாசம், நாம் கண்ணிற் காண்பது போன்ற பூதாகாசம் அன்று. பூதாகாசத்தின் விரிவே கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாமல் பரவி நிற்கின்றது. பருப்பொருளாகக் கருதப்படும் பூதாகாசமே எல்லை கடந்து இருப்பதானுல் நுண் பொருளாகும் ஞானுகாசத்தின் எல்லையை யாரால் வகுக்க இயலும்? அறிவுக்கு எல்லை கண்டார் அகிலத்திலுண்டோ? ஆகவே ஞானுகாசமும் எல்லையற்று எங்கணும் வியாபித்துள்ளது. இறைவன், காலத்தொடு கற்பனை இட முதலிய கடந்த தனி முதல்வன். ஆதலின் எல்லையற்ற பரம்பொருள் நடமாட எல்லையற்ற ஞானுகாசத்தை இடங்கொண்டான் போலும். பூதாகாசம் புறத்தே மட்டும் பரவி நிற்பது.

சித்துருவாய்த்தோன்றும்செகந்தனையீ தின்னதென்று
நித்தமவ தானஞ்செய் நீயொழியாய் நெஞ்சகமே.

ஞானுகாசம் உயிர்களின் உள்ளும் புறமும் ஒன்ருய் உடனுய் வேருய்க் கலந்து உபகரித்தலின் ஞானுகாசமே அவனியக்கத்திற்குப் பொருத்தமாயிற்று.

பூதாகாசத்தினின்று தோன்றும் ஒலி அதனைப் போன்றே 'சடமாக' (அறிவற்ற நிலையினதாக) எழும். ஞானுகாச ஒலியோ சித்தாக (ஞானக் கதிர்பரப்பி) எழும். சிதம்பரம் ஞான ஒளிக்கு உறைவிடமாய் (Power House) ஞான ஒலி நிலயமாய் (Radio Station) விளங்குகிறது. இதனை உணர்ந்தே சேவையர் காவலராகிய சேக்கிழார் பெருமானும், திருத்தொண்டர் புராணம் செய்வதற்குரிய ஞான ஒலி பெறுதற் கென்றே சிதம்பரஞ் சென்று, 'உலகெலாம்' என்ற தெய்வ மங்கலத் திருமொழி வானிழல் வழிப் பெற்ருர் என்பதறிக. ஐம்பூதத் தலங்களினும் சிதம்பரம் ஆகாசத் தலம் என்பதும் இக் குறிப்பை வலியுறுத்தும்.

தில்லைத் திருநடம்:

சிதம்பரம் சிறப்புள்ள தலமாதல் போலத் தில்லையாடியாகிய சிதம்பரேசனும் அவனது திருநடனமும் மாபெருஞ் சிறப்பினது என்பதை முன்னரும் கண்டோம். அத் திருக் கூத்து வெறும் புறக்கூத்தன்று. தகராகாசத் தனிக்கூத்தாகும். இதனைப் பழுத்த மனத்துப் பாம்பனடிகள்,

> "இதயபங்கய குகரமே குகை என்பதாரிய பாடையில்
> அதனுளாய சிதம்பரத்தினில் அமலஞான விண் மெய்யனைச்
> சததமும் சுக நடனமே புரி தம்பிரான்" (தகராலய ரகசியம்)

என்று கூறுவர். இதயாம்பர வெளியில் இனிதியற்றும் எல்லையில் தனிப்பெருங் கூத்தைக் காணும் பேறு கிடைத்து விட்டால், அவர்கள் காந்தம் இழுக்கும் இரும்பு போலத்

எத்தனையோ கோடி யியல்புரைத்தும் கேளாமல்
அத்தனையும் பாழா அயர்ந்தனையோ நெஞ்சகமே.

தம் வயங்கெட்டுப் பரவசப்படுவர் என்பது அருளம்மை வரலாற்றுலும் அறிந்தோம்: புறத்தே சிதம்பரத் தலத்தை யும் அகத்தே சிதம்பர நடனத்தையும் காணும் பேறுடை யார் சிவ புண்ணிய நிறைந்த சிவஞான யோகிகளாவர். அவர்கட்குச் சிதம்பரமும் சபாபதியும் ஊனெடு உயிருங் கலந்து நிற்கும் நிலே ஏற்படும். இதனையே

"சிற்றம்பலமும் சிவனும் அருகிருக்க
வெற்றம் பலந்தேடி விட்டோமே"

என்ற திருவாக்கு நினைவுறுத்துகிறது. நமது நடமாடு நம்பனது நாடகசாலையாக புறத்தே காட்சியளிக்கும் புனித தலமான சிதம்பர ஆலய அமைப்பே அதற்கேற்ற சிற்பக் கலையின் சிகரமா யமைந்துள்ளது. தண்ணீர் நிறைந்த தடாகத்தில் அழகுற மலர்ந்த தாமரையில் ததும்பியுள்ள மதுவின் சிறப்பை அங்கே பிறந்து வாழ்ந்து கிடக்கும் தவளை யறிவதில்லை. எங்கோ இருந்து வந்த வண்டு உண்டு மகிழும் என்பர். அதுபோல தில்லைச் சிறப்பு அனைத்தும், மாதவம் செய்த தென் திசையை வாழுமிட மாக் கொண்டு இமிழிசைப் பரப்பும் தமிழகத்தைத் தாய் நாடென்று பேசித் தலைநிமிர்ந்து வாழும் தமிழரைக் காட்டி லும் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து வந்த டாக்டர் பொகியூசன், பேராசிரியர் ஹாஸல் (Professor Hassal), ஈஸ்ட்விச் முதலிய பேரறிஞர்கள் அறிந்து பாராட்டி யுள்ளமை இங்குக் குறிப்பிடத் தக்கது. பேரா சிரியர் ஹாஸல் 'தெய்வக் கூத்தன்' (Divine Dancer) என்ற நூலில் நடராசர் நடனச் சிறப்பை மிகமிக அழகாக எழுதியுள்ளார். கூத்தப் பெருமானே அண்டாண்டங் களின் அசைவுக்கு ஆதாரமான அச்சாணி (The axis of the revolving Universe) என்கிறர்.

எட்டுருவும் ஈசன்மய மென்றறிந்து மந்தமதி
விட்டவனைப் பற்றி விடுதலுற்றுய் நெஞ்சகமே.

விஞ்ஞானம் விளம்புவது:

அகிலாண்டங்களின் தோற்றம் இயக்கத்தைப் பற்றிப் பல்கால் ஆராய்ந்த அமெரிக்க விஞ்ஞானி, "இவ்வுலகெல்லாம் அணுக்களின் செறிவால் ஆகிறது என்றும், ஆதலின் அது அணுவாகவே பிரிந்து மறைகிறது என்றும் அறிந்து நூல் எழுதினர். மேலும் பல ஆராய்ச்சி செய்து பேரண்டங்களின் அசைவு அனைத்தும் ஒரே தாள அமைப்பில் (in a Rhythm) நிகழ்கிறது என்றும் கண்டார். அவர் சிதம்பரத்து நடேசரைக் கண்டதும், இவர் கால் தூக்கிய நிலையும், மலர் சிலம்படியினையும் கூர்ந்து கவனித்தார். இவற்றைப் பற்றிய நமது சமய நூல் உண்மைகளையும் உணர்ந்தபின், இந்த அண்ட அசைவுக்கு ஆதாரமான இவ் வருமைத் திருவுருவை—தமிழன் மிகப் பழங்காலத்தே கண்ட திருவுருவை—வியந்து தம் நாட்டிற்குக் கொண்டு போனர் என்று கூறப்படுகிறது.

உலகத்தோற்ற ஒடுக்கம் பற்றி விஞ்ஞான மேதையாக விளங்கிய ஈன்ஸ்டீன் கடைசியாகக் கொண்டிருந்த கருத்தினை நடமாடும் நம்பனர் திருவுருவிற் கண்டு மகிழ்ந்தார் என்ருல், தில்லைப் பெருமான் திருநடம் சிறப்புப் பற்றி யாரே முழுதும் அளந்தறிவிக்க வல்லார்?

முடிப்புரை:

அகில அண்ட சராசர அசைவுக்கு மூல நிலயமான முழுமுதல் ஒருவனுளன். அவனே நடமாடும் நம்பன் என்னும் கூத்தரசனுகும். அவனது கூத்து புறத்திலும் அகத்திலும் அநவரதமும் நடைபெறுவது. புறத்தே ஆடிய கூத்து மூன்று, ஐந்து, ஏழு, நூற்றெட்டு எனவும் கூறப்படும். இதற்கென அமைந்த கூத்தர் உருவங்கள் பதினறு என்ப. அதற்குரிய உறுப்புக்கள் நிலை, பாவம் (மெய்ப்

நிவாத தலதீபம் நிற்பதில் நில்லாமல்
குவாலப் பிணிக்குரம்பை கூடிநைந்தாய் நெஞ்சகமே

பாடு), ஏந்தியுள்ள பொருள்கள், அணிவகை, அவற்றின் தத்துவ நுட்பங்களும் பிறவும் விரிவாய் நல்லோருரைத்த சாத்திர தோத்திர மேற்கோளுடன் கூறப்பட்டன. இத் தாண்டவங் கண்ட தபோதனர்கள், நங்கையர், நாயன் மார்கள், புலவர் பெருமக்கள் முதலியோர் அநுபவமும் விளக்கம் காட்டப்பட்டது. இக் கூத்தின் நோக்கம் ஐந்தொழில் செயலே. ஆன்மாக்களை மலக்கட்டறுத்து ஆனந்தவாரிதியில் அழுத்துதலே.

இக் குறிப்புடன் நிகழும் நடனங்கள் பல தலங்களில் இருந்தாலும் எல்லாவற்றிற்கும் மூல நிலயமாக அமைவது சிதம்பரமே. அதுவே உலோகங்களிற் சிறந்த பொன்னுகிய 'பொன்னம்பலம்'; ஞானுகாசமான 'சிதம்பரம்'; இதய குகை யைக் குறிக்கும் 'சிற்றம்பலம்' ஆதலின் இரு முனிவர்கள், சமய குரவர், சந்தானுசாரியர், பட்டினத்தடிகள், அருண கிரியார், இரணியவர்மன், ராஜராஜன், பராந்தகன், காளிங்கராயன் போன்ற பெருமக்களும் அருள் பெற்ற தலமும் அதுவே. ஆதலால் ஐந்தொழில்களையும் ஒருங்கே அமைக்கும் ஆநந்தத் தாண்டவம் இங்குத்தான் நிகழ்கிறது. சிதம்பரத்தைத் தரிசிப்பது முத்தி தரும் என்றது சிதாகாச நடமும் காணவேண்டும் என்றுணர்த்தியவாறும்.

எனவே அன்புமிக்கீர்! வையகத்தில் வாழக் கருது வோருக்கு வாழ்வளிக்கும் பெருமான் நடமாடும் நம்பனே என்றுணர்ந்து அவனது நடனத்தைப் புறத்திலும் அகத் திலும் காணும் பேறு பெற்று மனிதப் பிறவி எடுத்ததன் மாண்புறு பயனை எய்துவோமாக.

"ஊனடைந்த உடம்பின் பிறவியே, தானடைந்த
உறுதியைச் சாருமால், தேனடைந்தமலர்ப் பொழில்தில்லையுள்
மாநடஞ்செய் வரதர் பொற்றுள்தொழ."

சித்திரத்திலே வரைந்த தீபம்போல் நில்லாமல்
கத்தித் தலைவெடிக்கக் கற்றனையே நெஞ்சகமே.

"சிவசிதம்பரம்—திருச்சிற்றம்பலம்"

செய்ஞ்ஞின்ற நீலம் மலர்கின்ற தில்லைச் சிற்றம்பலவன்
மைஞ்ஞின்ற ஒண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்து நிற்க
நெய்ஞ்ஞின் றெரியும் விளக்கொத்த நீலமணி மிடற்றன்
கைஞ்ஞின்ற ஆடல் கண்டாற் பின்னை கண்கொண்டு
காண்பதென்னே!

"ஒளிவர்விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவள ருள்ளத்து ஆநந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துஉகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

(9-ம் திருமுறை)

(1) தென்பா லுகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன்
பொன்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்
விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ

(2) தேன்புக்க தண்பணைசூழ்த் தில்லைச் சிற்றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுமது என்னேடீ
தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெலாம்
ஊன்புக்க வேற்காளிக் கூட்டம்காண் சாழலோ.

(3) நெறியில்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்று மில்லாத கூத்தன்தன் கூத்தை எனக்கு
அறியும் வண்ணம் அருளியவாறு ஆர்பெறுவா ரச்சோவே.

(8-ம் திருமுறை)

(5) "உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்."

(12-ம் திருமுறை)

சிற்சபேசன் அருளால் 'நடமாடும் நம்பன்'
இதனுடன் நிறைவு பெறுகிறது.

அரவின் களமறுக்கில் ஐந்தலையின் கேட்டில்
பரமவுரு நீயடையில் பாறுமைந்தும் நெஞ்சகமே.

ஸ்ரீ ஜயதேவர்

(ரா)

இந்த குடிசையையும், என் வேஷத்தையும், ஏழ்மையையும் பார்த்து உமது பெண்ணைக் கொடுக்க வந்தீரே. நான் கல்யாணம் செய்துகொள்ளத் தயாராக இல்லை என்று ஜயதேவர் சொன்னதும், தேவசர்மா ஒன்றும் புரியாமல் பிறகு தன் பெண்ணை பார்த்து,ஜயதேவரைக் காட்டி இவரே உன் கணவன்; இதே உன் வீடு; இவருக்குப் பணி விடை செய்து கொண்டிரு என்று புத்திமதிகளைச் சொல்லி ஆசீர் வதித்துச் சென்றார்.

ஜயதேவர் ஒன்றும் செய்ய முடியாதவராய் தர்ம ஸங்கடத்தில் அகப்பட்டுப் பத்மாவதியைப் பார்த்து,பெண்ணே! நீ இந்தத் தனிமையான இடத்தில் எப்படிக் குடித்தனம் செய்வாய். நான் இதுவரையில் கவலை யில்லாம லிருந்தேனே என்று மனம் வருந்தினர். அதற்குப் பத்மாவதி, நாதா! என் பெற்றோர்களின் கட்டளைப்படி நான் தங்களிடமிருந்து கொண்டு தங்களுக்குப் பணி விடை செய்வதைத் தவிர நான் வேறு எங்கும் செல்லமாட்டேன். தாங்களிருக்கும்போது எனக்கு என்ன பயம் என்று சொன்னதும், ஜயதேவர் அவளுடைய பக்தி, உறுதி, நல்லொழுக்கம் இவைகளைக் கண்டு ஆச்சர்யப்பட்டு, இவளைக் கைவிடலாகாது என்று எண்ணி, தேவசர்மாவிடம் சென்று சாஸ்திரப்படி விவாகம் செய்து கொண்டு, ஸ்ரீ கண்ணனுடைய கல்யாண குணங்களைப் பாடியும், அபிநயம் செய்தும், இரு

தத்தாய பிண்டமதிற் சார்ந்தசலம் போல்துரிய
வஸ்தில் அடங்கியதாய் வாழ்வதென்றோ நெஞ்சகமே

வரும் இரு உடலும் ஒரு ஜீவனும் போல் காலங்கழிக்கலானார்கள்.

ஜீவகோடிகள் கடைத்தேற பகவான் பலரூபமாய் அவதரித்துச் செய்த லீலைகளையும், பகவானுடைய மகிமையையும் வர்ணித்து, கீத கோவிந்த காவ்யத்தை ஜயதேவர் இயற்றலானார். அப்போது நடந்த பகவானுடைய லீலை அதி அற்புதமானது. பத்தாவது ஸர்க்கம், 19வது அஷ்டபதி ஆறு சரணங்கள் எழுதி, ஏழாவது சரணத்தை மனதில் அமைத்தபோது, அது சரியில்லை என்று அவருக்குத் தோன்றவே, வேறு விதமாக அந்த சரணத்தை அமைக்கப் பார்த்தார். ஆனால் ஒன்றும் தோன்றவில்லை. பிறகு மனது சரியான நிலைக்கு வந்த பிறகு எழுதலாமென்று புஸ்தகத்தைப் பத்மாவதியிடம் கொடுத்துவிட்டு, தான் எண்ணை தேய்த்து ஸ்நானம் செய்ய வீட்டின் பின் பக்கம் சென்றார்.

சற்று நேரத்திற்கெல்லாம் அவர் எண்ணைத் தலையுடன் பத்மாவதியிடம் வந்து, தனக்கு ஒரு அழகான கல்பனை தோன்றியிருக்கிறதென்றும், அது மறக்குமுன் எழுத வேண்டுமென்றும், தான் கொடுத்த புஸ்தகத்தைக் கொண்டு வரச்சொல்லி, முன்பு சந்தேகப்பட்ட வார்த்தைகளையே எழுதி விட்டு மறுபடியும் ஸ்நானத்திற்குச் சென்றார். போஜனம் செய்த பிறகு வழக்கப்படி புஸ்தகத்தை எடுத்து எழுதப்போகையில் திடுக்கிட்டு ஒரு பக்கம் கோபமும், ஒரு பக்கம் ஆச்சர்யமும் ஏற்பட்டு, பத்மாவதி! இதென்ன அக்ரமம். ஸ்நானம் செய்யு முன் என் மனதில் எழுதத் தோன்றிய வார்த்தைகள் பகவானுக்கு அபசாரமானவை

எண்ணே யிருப்பற்ற எழில்தீபம் போலவும்நீ
யெண்ணரிய யிச்சைதவிர்ந் தென்றழிவாய் நெஞ்சகமே

என்று நான் எழுதாமலிருந்ததை யார் துணிந்து எழுதினது? யாரோ வீட்டில் வந்து புஸ்தகத்தில் எழுதி விட்டுப் போகும் வரையில், நீ கவனிக்காமல் எப்படியிருந்தாய் என்று கடிந்து கொண்டார். இதைக்கேட்டதும் பத்மாவதி வியப்புடன், தாங்களே பாதி எண்ணை தேய்த்துக் கொண்டிருக்கையில் வந்து, என்னிடம் புஸ்தகத்தை வாங்கி எழுதி விட்டுப் போனீர்களே. அதற்குள் மறந்து விட்டீர்களா? பேனுவிலும், புஸ்தகத்திலும்| எண்ணை பட்டிருக்கிறது பாருங்கள் என்ருள். வாசற் கதவு தாளிட்டபடியே தானிருந்தது. ஜயதேவர் சற்றுநேரம் திகைத்துப் போய், பிறகு ஞானக்கண்ணுல், தன்னைப்போல் பகவான் தான் வந்து புஸ்தகத்தில் எழுதிப் போயிருக்க வேண்டுமென் றுணர்ந்தார். பகவானுடைய கிருபையை என்னென்று மெச்சுவேன். பக்தர்களிடத்தில் அவருக்கிருக்கும் அன்புதான் என்ன! முதலில் என் மனதில் பகவான் ராதையைப் பார்த்து, "இளந்தளிரைப்போல் சிவந்து மிருதுவா யிருக்கும் உன் பாதத்தை என் தலையில் வை" என்று சொன்னதாக தோன்றியது. பகவானுடைய தலையில் கால்படலாமா. இதென்ன விபரீதமாக என் மனதில் தோன்றுகிறதே என்று என்னையே கடிந்துகொண்டு அதை எழுதாமல், பின்பு மனது சரியான நிலைக்கு வந்ததும் எழுதலாமென்று ஸ்நானத்துக்குச் சென்றேன். பகவானைக் காட்டிலும் பக்தர்களே மேலானவர்களென்று உலகத்திற்குக் காட்டவே நான் எழுதத் துணியாத வார்த்தைகளை, எழுது! இதுதான் உண்மைப் பக்தியின் விசேஷ மென்பதை வெளியிட்டிருக்கிருர். பகவான் என்னுருவம் எடுக்க நான்

இல்லாதிறக்கும் இழிகுரம்பை வாசனையைப்
புல்லாது மெய்யுணர்வைப் புல்லலென்றேநெஞ்சகமே

மகத்தான புண்ணியம் செய்திருக்கிறேன். ஆனால் அவர் தரிசனம் எனக்கு கிடைக்கும் பாக்யமில்லையே. பத்மாவதி! நீ அவர் தரிசனம் கிடைக்கப் பெற்றாய். பகவானைக் கண்ணாரக்கண்டு பேசும் பக்தியும், பாக்யமும் உனக்கிருப்பது நானறியவில்லை. உன் மகிமையை அறியாமல் அஷ்டபதிகளில் என் பெயரை மட்டும் முத்திரையாய் வைத்து வந்தேன். நீயே ஈசனுக்குகந்த பக்தை. புருஷோத்தமன் உன்னை அங்கீகரித்ததற்கு காரணம் இப்போதுதான் தெரிய வந்தது என்று அவளைக் கொண்டாடி, அந்த அஷ்டபதியின் எட்டாவது சரணத்தில் 'பத்மாவதியின் பர்த்தாவான ஜயதேவகவி' என்று முத்ரை வைத்தார். அன்றுமுதல் அந்தத் தம்பதிகள் இந்தக் காவ்யத்தையே பாடிக்கொண்டும், அபிநயித்துக் கொண்டும் கிருஷ்ண பக்தியி லாழ்ந்திருந்தார்கள்.

(தொடரும்)

ஆத்ம போதம்

(திரு. நா. பிச்சுமணி - திரு. கி. சுப்பிரமணியன்)

நாட்டமும் நலனும்

ஆசை வசப்பட்டு மனிதன் மனம் தனக்கும், பிறருக்கும் நன்மை பயக்காத பல பொருள்களை நாடுகிறது. அவை நமக்கு இன்பம் பயப்பனபோல் தோன்றினும், அவற்றில் உண்மை இன்பமில்லை; அவை நமக்கு நன்மை செய்யா என்ற உண்மை தெரிந்தும், எந்தப் பொருள்களை நாடினால், எவ்வழி வாழ்ந்தால் நமக்கு நிலைக்கும் இன்ப

சும்மா யிருந்துசுகம் தோயாமல் தன்னினைவால்
அம்மா சுகமடைந்தோர் ஆரிருப்பார் நெஞ்சகமே.

மும், அளவிலா நலனும் கிடைக்கும் என்ற பேருண்மை அறிவால் பல தட்வை உணர்த்தப்பட்டும், மீண்டும் மீண்டும் ஆசைச் சேற்றில் உழன்று அல்லல் படுகிறோம்.

வாழ்வில் பாதி தூங்கிக் கழிகிறது. காலை சூரியன் உதித்த பின்னரும், கிடக்கை விட்டு எழுந்திருக்க நமக்கு மனம் வருவதே யில்லை. இமை விழித்த பின்னரும், படுக்கையில் புரண்டு புரண்டு படுத்திருக்கிறோம். இது நமது அறியாமையின் விளைவல்ல. ப்ரஹ்ம முஹூர்த்தம் என்று கூறப்படும் நாலு மணிக்கு எழுந்து, நித்தியக் கடன்களை முடித்துக் கொண்டு, இன்பமாகக் குளித்து, சிரத்தையுடன் திருநீறணிந்து, பக்தி பெருக அன்பால் கனிந்த சிந்தையோடு இறைவனை வழிபடுதல் பயக்கும் இன்பமும், அதனால் மனதிற்குக் கிட்டும் அமைதியும், ஏற்படும் நன்மையும் நம் அனைவருக்கும் தெரியும். இருப்பினும் மனம் தூக்கத்தை நாடுகிறது என்பது விந்தையன்றோ! மனம் நாடும் பொருள் நமக்கு நன்மை பயப்பனவாக இல்லை. தூக்கத்தை நாடி, துக்கத்தை விளைவித்துக் கொள்கிறோம். விழித்தும் தூங்குகிறோம்.

அல்லது ஆடம்பர வாழ்க்கையையும், நம் உயிருக்கும் உடலுக்கும் ஒவ்வாத பல சிற்றின்பப் பொருள்களையும், வீண் செலவுகளையும் நாடி பொய்யென்று தெரிந்தும் பகட்டாக வாழும் அசட்டு விருப்பம் நம்மை விழுங்க, அல்லல் படுகிறோம். நம்மிலும் மேதைகள், உழைப்பிலும் உயர்விலும் மேலோர், சீரும், சிறப்பும் மிக்கோர், குணத்திலும் குலத்திலும் செல்வர் பலரிருப்பது தெரிந்தும், எல்லாவற்றிலும் மேலாக ஒவ்வொரு

போராட்டப் பட்ட புரமெடுத்த இவ்வரையில்
சீராட்டி லென்னசுகஞ் சேர்ந்தனை நீ நெஞ்சகமே.

உயிருளும் உள்ளும் புறமும் உறைந்து, ஆட்டி, ஆட்டு விக்கும் ஏகம்பன் ஒருவன் இருப்பதை உணர்ந்தும், உணர்ச்சியற்ற பேதைகளாய், சிறு சிறு காரியங்களிலும், 'நான்! நான்!' என்று, ஆணவத்தால் இறுமாப்புற்று, 'இது எனது! இது எனது!' என எல்லாவற்றையும் தனதென்று மதி மயங்கி, அந்திய காலத்தில் நாம் செயலற்று சக்தி யற்றுப்போகும் தருணம், எனது! எனது! என்று வீம்பு பேசிய பொருள்கள் யாவும் நம்மைக் கைவிட, அந்த கன் நம்மை வா, வா என்றழைக்க அவதி யுறுகிறோம். நாம், 'நமது! நமது என அன்பு பாராட்டிய மனையாளும் மக்களும், வாழ்வும் நம்மை வீட்டுமட்டிலேயே வழியனுப்பி விடுகிறார்கள். நாம் இறந்தது கேட்டு அழுகிடும் போலி மாதரும் வீதி தாண்டி வருவதில்லை. மைந்தரும் இடுகாடு வரை தொடர்ந்து நம்மைச் சுட்டுவிட்டு, நாம் விட்டுச் சென்ற சொத்தைப் பகிர்ந்து கொள்வதில் பூசலிடு கின்றனர். நாம் நம்மைச் சேர்ந்த தென்று கொண்டாடிய யாவும் நம்மைக் கைவிட்டுவிட, அறிந்தோ அறியாமலோ நாம் செய்த நல்வினைப் பயனும், அறச் செய்கைகளும், தீக் கருமப் பயன்களுமே நம்மைப் பின் தொடர்கின்றன.

> அத்தமும் வாழ்வு மகத்துமட்டே விழி யம்பொழுக
> மெத்திய மாதரும் வீதிமட்டே விம்மி விம்மியிரு
> கைத்தலைமேல் வைத்தழு மைந்தருஞ் சுடு காடுமட்டே
> பற்றித் தொடரு மிருவினைப் புண்ணிய பாவமுமே.
>
> —பட்டினத்தார்.

மனைவியையும், மக்களையும் நாடினோம். அவர்களும் நமக்கு நலம் பயக்கவில்லை. சிற்றின்பப் பொருள்களையும்,

---

**இல்லாளும் இல்லத் திருநிதியும் ஈன்றமக(வு)
எல்லாம் மறந்திருப்ப தென்றுரையாய் நெஞ்சகமே.**

ஆடம்பர வாழ்க்கையையும் நாடினேம். அவையும் நமக்குப் பிணியையும் மூப்பையும், வீண் செலவுகளேயும் கொடுத்து நம்மைக் கவலைக்கும் பயத்திற்கு முள்ளாக்கின. நம் இஷ்டம்போல் நம் மனம் சென்ற வழி நடந்தோம். இந்த உடலைப் பலவிதங்களில் சிங்காரித்து அழகு செய்தோம். நாக்கைத் திட்டி உடல் நலத்திற்கு ஒவ்வாத பல பொருள்களேயும் உண்டு, ஊனைப் பெருக்கி, உந்தி வளர்த்தோம். ஒன்றும் நமக்கு நலம் பயக்கவில்லை.

இருப்பதுபொய் போவதுமெய் யென்றெண்ணி நெஞ்சே
ஒருத்தருக்குந் தீங்கினை யுன்னதே-பருத்ததொந்தி
நம்மதென்று நாமிருப்ப நாய்,நரிகள், பேய்,கழுகு
தம்மதென்று தாமிருக்குந் தான்.

—பட்டினத்தார்.

மனம் ஆண்டவன் குடியிருக்குங் கோயில் என்பதை மறந்தோம். எண்ணத்தகாத பல கெட்ட சிந்தனைகளின் சுழற்சியில் பெரும்புயலில் அகப்பட்ட துரும்புபோல் அலைந்தோம். பொய், பொறாமை, கோபம், வஞ்சனை, அச்சம், கோழைத்தனம் முதலிய கெட்ட குணங்களுக்கு நம்மை விற்றோம். வாழ்வின் இறுதிப் பகுதியில் நமன் உலகு புகும் தருணம் செய்ததை எண்ணி எண்ணித் துன்புறுகிறோம்.

நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவ நிதியந் தேடி
நலமொன்று மறியாத நாரியரைக்கூடி
பூப்பிளக்க வருகின்ற புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்

பந்த நமக்குண்டதனைப் பாற்ற முத்தி வேண்டுமெனும்
இந்தநினை விரண்டும் என்றயர்ப்பாய் நெஞ்சகமே.

காப்பதற்கும் வகையறியீர் கைவிடவு மாட்டீர்
கவர்பிளந்த மரத்துளையிற் கானுழைத்துக் கொண்டே
ஆப்பதனை யசைத்துவிட்ட குரங்கதனைப் போல
அகப்பட்டீர் கிடந்துழல வகைப்பட் டீரே.

ஐயோ துன்பப் பழத்தை விலைபேசி வாங்கிய நம் கதிகெட்ட அவலமான நிலையைக் கண்டு ஏளனம் செய்வது போலவும், பரிதாபத்தால் நம்மீதுள்ள அன்பால் நம் நிலையை நமக்கு உணர்த்தி நம்மை விழிப்படையச் செய்வதற்குப் போதும், இப் பாட்டு நம் காதுகளில் ஒலிக்கவில்லையா? இப் பேர்க்கொத்த வாழ்வு வாழ்ந்து, இறுதியில், நம் வாழ்வின் வரவு செலவு கணக்குகளைச் சற்று ஆராய்ந்து பார்த்தால், "நாம் நாடி அலைந்து புசித்த பொருள்கள் யாவும் புசிக்கப்படவில்லை; நாமே நாம் விரும்பிய பொருள்களால் புசிக்கப்பட்டோம். நாம் நம் வாழ்வைத் தூய்மையாக்கிக் கொள்ள, நற் கருமங்கள் புரியப் பாடுபடவில்லை. ஐம்புலன்களும், மனமும் நம்மையே படாத பாடுபடுத்தி வைத்துவிட்டன. வேண்டும், வேண்டும் என்று, நாள் தோறும் தேவைப் பாட்டுப்பாடி திருப்தி காணாது வாழ்க்கை நடத்திய நமது தேவைகள் ஓயவில்லை. நாமே ஓய்ந்து போனோம். நாளை, நாளை என்று உபயோகமான காரியங்களை எல்லாம் ஒத்திப்போட்டு வீண் வாழ்க்கை வாழ்ந்த நம் காலமே முடியும் தருணத்தில் இருக்கிறது" என்னும் உண்மையை உணர்வோம்.

(தொடரும்)

மறப்பதுவே நல்லதென மாணவர் தாஞ் சொல்ல
அறத்தினமும் நீ நினைத்தே யல்லலுற்றாய் நெஞ்சகமே.

பக்தியின் சக்தி 5

(முன் தொடர்ச்சி)

தியாக சிகரத்திலே

(ஆ .கி. ரங்கராஜன்)

(142-ஆம் பக்கத் தொடர்ச்சி)

"இறைவனை நாம் ஏன் வணங்க வேண்டும்? அவன் எங்கும் உள்ளான் என்னும் போது நம்மிடத்திலும் இருக்கின்ருன் என்பதால் நாமே அவனுக விளங்குகிருேமே! அவ்வாறிருக்க, தனியாக இறைவனைப் போய் ஏன் வணங்க வேண்டும்?"

இது விதண்டாவாதிகளின் கேள்வி. ஆனல் விதண்டாவாதிகள் தெய்வ நிலையை அறியார். தம்மிடம் உறையும் இறைவனைக் காணும் வழியையும் அவ்வழி தம்மிடமே உள்ளது என்பதையும் அறியார். இது பற்றியே தாயுமானுரும் "வீறுவாதம் புகலும் வாய்வாத நோயாளர்க்கும் எட்டாத முக்கண் உடை மாமருந்து..." என்று இறைவனை குறிப்பிடுகிருர்.

பழுத்த ஞானியர்கள் தாமே இறைவனின் வடிவமாக விளங்குவர். இறைவன் அவர்களின் பக்திக்கு அபார சக்தியை வழங்குகிருன். அதோடு மட்டுமல்ல. தானே சக்தியாகவும் விளங்குகிருன்.

இறைவன் தன்னிடமும் உறைவதாக எவன் உணருகின்ருனே, அவன் அப்போதே பாச பந்தங்களினின்று விடுபடுகிருன், உலகில் உள்ள சகல பொருள்களிலும் ஆண்டவனைக் காண்கிருன். அச்சமயத்தில் அவனது குறைகள் அனைத்தும் நிறைவு பெறுகின்றன. "யாவும்

எல்லாம் மறந்துவிட்டா லிவ்வுடலம் நீங்குமெனில்
இல்லாமிலாப் பித்தன் இருப்பதுவோ நெஞ்சகமே.

இறைவனுடையது. எல்லாம் இறைவனின் சாயலே. உலகப் பொருள் அனைத்தும் அழிவதுபோலத் தோன்றினும் அழிவதல்ல. அவை அவனோடு ஐக்கியமாகின்றன. நமக்கு எதுவும் தேவையில்லை. அனைத்தும் நம்மிடத்தே உள்ளன. நம்மைவிட்டு எதுவும் பிரிந்துவிடவும் இல்லை.'' இவ்வாறு அவன் கருதும் கலையை அடைகிறான்.

மகேந்திர வர்மன்

காஞ்சிபுரம் ஒரு சமயம் பல்லவர்களால் ஆளப்பட்டது. பல்லவர்கள் எல்லாக் கலைகளிலும் வலலவர்கள். ஆகையால் பற்பல இடங்களில் தங்களின் திறமையைக் காட்டியுள்ளனர். மகேந்திர வர்மன் பல்லவ வேந்தன். பெரும் போர் வீரன். வாதாபி என்னும் நகரைத் தலை நகரமாகக் கொண்டு தக்காணத்தை ஆண்ட புலிகேசி என்ற அரசனைப் போரில் தோற்கடித்தான். பின் வாங்கிய புலிகேசி மகேந்திரன் மறைந்த பின் மீண்டும் காஞ்சிபுரத்தின் மீது படையெடுத்தான்: அப்போது மகேந்திரனின் புதல்வனாகிய நரசிம்ம வர்மன் காஞ்சியை ஆண்டு வந்தான். தந்தையைவிடத் தனயன் தந்திரத்தில் சிறந்தவன்.

பரஞ்சோதியின் படைத்தலைமை

நரசிம்ம வர்மன் 'பரஞ்சோதி' என்னும் படைத் தலைவரைப் பெற்றிருந்தான். பரஞ்சோதியார் பக்தியில் சிறந்தவர். ராஜபக்தி, தேசாபிமானம், மக்களிடம் விசுவாசம் அனைத்தும் ஒருங்கே அவரிடம் நிறைந்து விளங்கின. மன்னனுக்கும் மற்றவர்க்கும் அவற்றை வெளிப்படையாக அறிவிக்க அரியதொரு சந்தர்ப்பமும் வாய்த்தது பற்றி

முற்றும் மலமாயிருக்கும் மூடமதாம் இவ்வுடலில்
சற்றும் விரக்தி யுண்டாய்ச் சார்ந்திலையே நெஞ்சகமே.

அவர் இறைவனைப் புகழ்ந்தார். அதோடு, அரசாக்ஷிக்கு அந்தப் போரின் காரணமாக யாதொரு இடையூறும் நேரலாகாதென அவர் இறைவனைப் பிரார்த்தித்தார்,

பரஞ்சோதியாரின் கட்டளைப்படி பல்லவ சேனை புலிகேசியின் படையை வளைத்தது. 'வெற்றி கண்டோம்' என்ற இறுமாப்புடன் காஞ்சிக்குள் பிரவேசித்த புலிகேசியின் படைகள் உணவும் நீருமின்றித் தவிக்கும் நிலை ஏற்பட்டது. பல்லவ சைனியத்தின் தாக்குதலுக்கு புலிகேசியின் படைகள் சகியாமல் தத்தளித்தனர். அதில் ஒரு பகுதியினர் சரணடைய, ஒரு பகுதியினர் நாசமுற மற்ெருரு பகுதியினர் புறமுதுகிட்டு ஓடத் தலைப்பட்டனர்.

வெற்றியும் பதவி விடுதலும்

இதே சமயத்தில் பல்லவ சேனையும் சற்றுக் களைத்தது. ஆயினும் பரஞ்சோதியார் தமது படைக்கு சிறந்த உணவும் உற்சாகமும் அளித்து, பின்வாங்கும் புலிகேசியின் படையைப் பின் தொடரும்படி உத்திரவிட்டார். ஏன்? மீண்டும் புலிகேசியினல் அபாயம் ஏற்படாமல் இருக்கவும், அரசரின் கீர்த்தி உயர்வு பெறவும்தான் அச் செயலில் ஈடுபட்டார். பல்லவ வீரர்கள் பரஞ்சோதியாரின் ராஜ பக்தியையும், அப் பக்திக்கு ஏற்பட்டதோர் சக்தியையும் அன்பையும் கண்டு, அவர் சொற்படி புலிகேசியின் சேனையைப் பின் தொடர்ந்து, அவனது தலை நகரான வாதாபியைக் கைப்பற்றி, அங்கு நரசிம்மவர்மனின் வெற்றிக் கொடியை நாட்டினர். பரஞ்சோதியார் அங்குக் கிடைத்த அபரிமிதமான செல்வத்தைத் தாம் அடைய விரும்பாமல் ஜெயகோஷத்துடன் திரும்பி, அப்பொருளை எல்லாம் தமது மன்னருக்குக் காணிக்கையாக அவர் முன் சமர்ப்பித்தார்.

செய்ததுவே செய்யத் தினந்துணிந்து செல்வதுவே உய்யும் வழியென்று ஒருப்பட்டாய் நெஞ்சகமே.

நரசிம்ம வர்மன் அகமகிழ்ந்து அச் செல்வத்தை அப்படியே அவருக்கு அளித்தான். மிகுந்த வல்லமை கொண்ட பகைவர்கள் முறியடிக்கப் பட்டமையால் இனி ஏதும் போர் வராதெனக் கருதி, அவரைப் பதவியினின்று ஓய்வு பெற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொண்டான்.

பரஞ்சோதியார் மாபெரும் யுத்த வீரராக இருப் பினும் தெய்வ பக்தியில் சாலச் சிறந்தவர். இறைவனடி யார்கள் வேண்டுவதைத் தடைகூறாமல் அளிக்கும் உள்ளம் படைத்தவர். அதிதிகளுக்கு மனம் தளராது அன்ன வஸ்திரம் அளிப்பவர். 'யாவும் இறைவனின் உண்மை ஆதலின் ஆண்டவனின் அடியார்கள் வேண்டுவதை அளிப் பதே நம் கடமை' எனக் கருதுபவர். ஆகையால் அவர் மன்னன் அளித்த மாபெரும் திரவியத்தை நல்வழியிலேயே செலவிடக் கருதி, திருச்செங்காட்டங்குடி நகருக்கு அச் செல் வத்துடன் போய்ச் சேர்ந்து, இனிய தான தர்மங்களைச் செவ் வனே நடத்தி வந்தார்.

பரமனின் லீலையும் பரஞ்சோதியின் பண்பும்

இத்தகைய பரஞ்சோதியாரை மக்கள் சிறுத் தொண் டர் என அழைத்தனர். அவரது தேச பக்தியைத் தெரிவிக்க ஒரு சந்தர்ப்பம் அளித்ததுபோல அவரது தெய்வ பக்தியை உலகோர் அறிந்து வியப்புறவும் இறைவன் ஓர் திருவிளை யாடல் புரிந்தான்.

பரஞ்சோதியாரின் செல்வம் கரைந்தது. இருப்பினும் உத்தம மனைவியாகக் கிடைத்த திருவெண்காட்டு நங்கை அம்மையின் உதார குணமும், பணிப் பெண்ணாக வாய்த்த சந்தண நங்கையின் உயரிய சீலமும், மைந்தனாகப் பிறந்த சீராளனின் நல்லொழுக்க நடத்தைகளும் சிறுத்தொண்

பத்துத் திசையும் பதினுன் குலகுமற்றும்
சித்தசித்துஞ் சிற்சடமுஞ் சிவரூபம் நெஞ்சகமே.

டரின் சித்தத்தை மட்டற்ற மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திய தோடு, அவர் மேன்மேலும் ஆண்டவனிடத்தும் அவனது அடியாரிடத்தும் கொண்ட பக்தியை அதிகரிக்கவும் செய்தன.

பரஞ்சோதியார் அதிதிகள் எவருக்கேனும் அன்ன மிடாமல் தாம் உண்ணமாட்டார். என்றைக்கேனும் அதிதிகள் வராமாற்போனுல் அன்று தம் குடும்பத்தின ருடன் பட்டினிகிடப்பார். இத்தகைய உத்தமத் தொண் டரை இறைவன் பரிசோதிக்கத் துணிந்தான். அதாவது பண்பட்ட அவரது பக்தியைப் பாருலகுக்குக் காண்பிக்க விரும்பினன்.

ஒருநாள், மைந்தன் சீராளன் பள்ளியில் பயின்று கொண்டிருக்கையில் அவன் எதிர் பாராதவிதமாய் ஓர் உறக்கம் தோன்ற, சற்றுக் கண் அயர்ந்தனன். அப்போது ஒரு கனவும் கண்டான். தாயும் தந்தையுமாகத் தன்னை வெட்டிக் கொன்று சமைத்து ஓர் அதிதிக்கு விருந்திட்ட தாக அக் கனவில் தோன்றியது. இந் நிகழ்ச்சி ஒரு க்ஷண நேரமே நிகழ்ந்தது. கண் விழித்தான் சிறுவன். அங்கம் பதறியது. ஆச்சரியமும் திகைப்பும் தோன்ற, எதுவும் புரியாமல் சற்று பிரமித்தான். இளம் பாலகன் தானே!

இதே நேரத்தில் பரஞ்சோதியார் அதிதிகளும் அடியார்களும் எவரும் தம் இல்லம் நாடி வரக்காணுததால், தாமே தேடி அழைத்து வரச் சென்றுர். எவருமே தென் படாதது கண்டு அவர் மனம் பதைத்தது. "தயாபரா! பக்த பராதீனு! இது உன் சோதனையா? அதிதிகள் ஒரு வருமே வரக்காணேனே! இன்றைக்கு நாங்கள் அனைவருமே பட்டினி கிடக்க வேண்டியதுதானு? தயாரித்த சமையல் எல்லாம் வீணுகிவிட வேண்டுமென்பது உன் விருப்பமா?

பண்ணவிதன் பாதநிழற் பற்றியது வாயிருக்கில்
எண்ணரிய இச்சை யிரிந்தோடும் நெஞ்சகமே.

கருணாநிதே! சிறிதேனும் இந்த ஏழை மேல் கிருபை பாலிக்க மாட்டாயா?" என வருந்தி முறையிட்டார்.

சர்வேஸ்வரனின் சந்யாசிக் கோலம்

அகில உலகினர்க்கும் உணவளித்து ஆதரிக்கும் அம்பிகா நாதன், தானே பரதேசிக் கோலத்துடன் உணவு யாசிக்க வருபவன் போன்று கரத்தில் பிரம்ம கபாலமும், ஜடாமுடிகளும் கொண்டு கௌபீனம் அணிந்து வெகு தொலைவிலிருந்து தள்ளாடி நடந்து பரஞ்சோதியாரின் எதிர்ப்பட்டார்.

குதூகலம் கொண்டார் சிறுத்தொண்டர். "ஸ்வாமீ! வரவேண்டும்! வரவேண்டும்! தங்கள் வரவினால் அடியேன் கிருதார்த்தனானேன்! நமது இல்லத்தில் உணவருந்திப் பசியாறிச் செல்ல வேண்டுமென்று கோருகிறேன்" என்றார்.

சந்யாசியோ அலக்ஷியமாக "நீர் யாரய்யா எனக்கு விருந்தளிக்க? நான் சொல்கிறேன் பரஞ்சோதிப் பிரபு விடம். அவரல்லவா எனக்கு வேண்டியதை அளிப்பார்?" என்று கூறி இரண்டு அடிகள் எடுத்து வைத்தார். சிறுத்தொண்டர் மகிழ்வுடன், "அடியேன் தான் பரஞ்சோதி ஸ்வாமீ!" என்று கூற, சந்யாசி "நீதான் பரஞ்சோதியா? எனக்கு நம்பிக்கை இல்லை. உண்மையில் நீயே பரஞ்சோதியாக இருப்பின், நான் வேண்டுவதை அளிக்க உனக்குத் தைரியம் உண்டா?" என்று கேட்டார். பரஞ்சோதியார் "தாங்கள் எது வேண்டினும் உடனே தரத் தயாராக இருக்கிறேன். தயவு செய்து வாருங்கள்!" என வேண்டினர்.

சந்யாசியின் சாகஸம்

சந்யாசி "உன்னிடம் உள்ள பொருளையே கேட்கிறேன். கேட்டபின் தடுமாறக் கூடாதென்பதற்காக.

என்னிதயத் துள்ளே யிருந்ததிரு நெல்லைபதத்து
உன்னினைவும் நீயும் ஒழிவதென்றோ நெஞ்சகமே.

முன் கூட்டியே கேட்கிறேன். தருவதாக சத்தியம் செய்து கொடு இல்லையேல் நான் வேறிடம் செல்வேன். அப்படி நான் சென்றுவிட்டால் உன் இல்லத்திற்கு எவருமே வாராதபடியும் செய்ய எனக்கு வல்லமை உண்டு. என்ன சொல்கிறாய்? நீ பரஞ்சோதியாக இருப்பின் சத்தியம் செய்துதா" என்றார் வெகு கண்டிப்பாக!

பரஞ்சோதியார் உள்ளத்தில் அவ் வார்த்தை சுடுசரம் போல் பாய்ந்தது. "ஸ்வாமீ! தாங்கள் விரும்புவதை யான் அளிக்கத் தவறுவேனாயின் கொடு நரகில் வீழ்வேன். பரிதி குளிர்ந்தாலும், பார் பிளந்தாலும் பரஞ்சோதியின் மனம் பழுதடையாது என்பது சத்தியம். தாங்கள் விரும்பியதைக் கேளுங்கள்!" என்றார்.

சந்யாசி திடுக்கிட்டார். பரஞ்சோதியார் விருந்தினர் பால் உள்ள அன்பின் உயர்வினால் ஏற்பட்ட ஆவேசத்தில் வாக்களித்தார் என்பதை உணர்ந்து, மேலும் சோதிக்க எண்ணி, "ஆஹா! இப்போதுதான் நீ பரஞ்சோதி என்பதை அறிகிறேன்!...யான் எப்போதும் மரக்கறிகளை உண்பதில்லை. புலால் உண்பவன் யான். அதிலும் அந்த ஊன் பச்சிளங் கன்றினுடையதாக இருத்தல் வேண்டும். அதற்காக பிற உயிர்களை வதைத்து நீ விருந்திடுதல் தவறு. இன்று உனது உடமையாகவும் உரிமையாகவும் உன்னை உய்விப்பதுமாக உள்ளதோர் ஜீவனின் மாமிசமே எனக்குத் தேவை. அதற்கு உன் மனம் இசையாவிடில் உன் விருப்பம் போல் செய்யலாம்" என்று கூறி ஏதும் கபடமறியாதவர் போல் நடித்து நின்றார்.

(தொடரும்)

அண்டமெலாம் தோன்றி யழிந்தபத மாயிருந்தால்
பிண்ட வுபாதியன்றே பேராதோ நெஞ்சகமே.

ஸ்ரீவைஷ்ணவப் பகுதி 3.

மங்களா சாஸனம்

(அன்பன்)

(136 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடாடா! ஓங்காரத்தையா உச்சரிக்கிறீர்கள்? நல்லது தான்; எனினும், தபோ லோகத்தில் உங்களை அது தள்ளி விடுமே! என்றும் இன்பங்கொண்டு இருக்கலாம் என்றாலும், சுயநலத்தில் அப்படி யெல்லாம் சுழிக்கலாமா?

மாயை முதற் காரணம். அதனி லிருந்து நுண்ணுடல்; நுண்ணுடலி லிருந்து பருவுடல். ஒவ்வொரு உடலிலும் இருந்து, ஊசலாடுகிறது இப்படி உயிர். உங்கள் உபாசனையின் முடிவில், நுண்ணுடல் மாயையில் நுழைந்துவிடும்.

பால்போல் உளது பருவுடல். அதன் ஏடுபோல் உளது நுண்ணுடல். பாலினும் ஏடுதான் பயனுளது. ஏடு கெட எவரும் எண்ணுவது இல்லை. அதுபோல் பருவுடலின் சாரமான நுண்ணுடல், மீளா நடையில் மாயையுள் புகுந்து மடங்கிவிடும்; வீணான அந்த ஆன்மானுபவத்தையா விரும்புவது?

ஐயோ! இது உமக்கு அடுக்குமா? பயனை ஒரு சிறிதும் கருதாத பாகவதர்களைப் பாருங்கள்! தாமும் வாழ்ந்து, மற்றவரையும் வாழ்விக்கும் தகுதியுடையவர் அவர்கள். சிறக்க அவர்களுள், ஒருவனாக அடியேனும் சேர்ந்துளன்.

எங்களைப்போல் நீங்களும் இருக்க வேண்டும் என்பது எங்கள் எண்ணம். உங்கள் முடிவான உபாசனையை உதறித் தள்ளுங்கள். கேண்மையுடன் இதனைக் கேளுங்கள்!

எல்லா வுலகும் இறந்துமிற வாதபதம்
செல்லாது, காண்பவற்றிற் சிக்கினையே நெஞ்சகமே.

'ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம்வந்து எங்கள் குழாம்புகுந்து
கூடும் மனம் உடையீர்கள், வரம்பொழி வந்து ஒல்லை கூடுமினோ'

ஆ! பொழுது ஒவ்வொரு விநாடியாய்ப் போய்க் கொண்டே யிருக்கிறதே! அருமையான காலத்தை வீணாக்குவது அபாயகரமானது. நுண்ணுடல் மாயையில் நுழைந்து விட்ட பின்னர், ஒன்றும் செய்ய முடிவதில்லை.

வாருங்கள்! எங்கள் கூட்டத்தில் இரண்டறக் கலந்து கொள்ள எண்ணம் இருந்தால், மிக விரைந்து வாருங்கள்!

வந்து என்ன செய்ய வேண்டும் என்கிறீர்களா? எங்கள் அனுஷ்டானம் சுலப சாத்தியமானது; ஒளிவு மறைவு ஒன்றும் இல்லை.

'நாடும் நகரமும் நன்கறிய நமோ நாராயணா என்று
பாடும் மனமுடைப் பத்தருள்ளீர், வந்து பல்லாண்டு கூறுமினே!'

உயர்ந்த பிரணவத்தை இன்றுவரை உச்சரித்த நீங்கள், அதனுடன் திரு எட்டெழுத்தையும் கூட்டிக் கொள்ளுங்கள் என்று தான் கூறுகின்றேன். இத்துணை நாள் அனுஷ்டானத்திற்கு மாறுயிற்றே இது என்று எண்ணவே எண்ணாதீர்கள்; முன்னைய சூழ்நிலை கைவல்ய நிஷ்டை; அது குறையின்பக் கூட்டம். நான் குறிப்பிடும் இந்நிலை, பூர்ணானுபவம்; அதுதான் நிறையின்ப நிலை. இரண்டில் எது தகுதி? எண்ணுங்கள்.

ஓம் நமோ நாராயணாய

ஆம். அப்படித்தான் சொல்லுங்கள்! நாட்டவரும், அதன் தலைநகரில் நடப்பவரும், நீங்கள் பெற்ற அரிய நலத்தை அறியும்படி, அறிந்து அவர்களும் அனுஷ்டிக்

தோன்று சிசுவுணர்வு துகளற்றுக் காணுதலின்
மான்றஉரு வம்தோன்ற வருவதென்றே நெஞ்சகமே.

கும்படி, இந்த சாதனையைத் தொடர்ந்து செய்யுங்கள்! அதோ பாருங்கள் பகவானைப் பாடும் பாகவதர்களை !

வாயாடும்போது மனமாட வேண்டாவா? பொருளை உணராது பாடுவதில் பொலிவில்லை ; பாட்டின் பொருளை மனத்தால் உணர்ந்து, வாயால் பாடுவது பாகவதர்களின் வழக்காறு. பயனுன அவர்களே பக்த சிரேஷ்டர்கள்!

சிறக்க அவர்களொடு சேர்ந்து கொள்ளுங்கள் என்று, பெருங்கருணையுடன் உபாஸகர்களைப் பார்த்துப் பேசுகின்ருர் பெரியாழ்வார். இனி, பாசுரத்தை முழுதும் பாருங்கள்!

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து எங்கள் குழாம் புகுந்து
கூடும் மனம் உடையீர்கள் வரம்பொழி வந்து ஒல்லை கூடுமினே
நாடும் நகரமும் நன்கறிய நமோ நாராயண என்று
பாடும் மனமுடைப் பக்தருள்ளீர் வந்து பல்லாண்டு கூறுமினே.

(பொழிப்புரை.) (பயன் கருதாத) எங்கள் கூட்டத்தில் வந்து சேர்ந்து இணைந்து ஒன்றிவிடும் எண்ணம் உண்டாயின், சூட்சும தேகம் மூலப் பிரகிருதியில் லயித்து விடுவதன்முன், இந்த ஆத்மானுபவம் போதும் எனும் கட்டிய வரம்பைக் கட்டழித்து, விரைந்து (கனிவுடன்) எங்களில் கலந்து கொள்ளுங்கள்; நாடும் நகரும் நலம் உணர, அஷ்டாட்சரத்தை பாடும் எண்ணமுள்ள பக்தர்கட்குள் படர்ந்திருந்து, மாபெருந் திருமாலுக்கு மங்களா சாஸனம் செய்யுங்கள், (எ - று).

[குறிப்பு:—ஏடு - நண்ணுடல். வரம்பொழிய என்பது வரம்பொழி என நின்றது.]

தோற்றுருவை யீதெனவே சுட்டுமய லாமறிவை
மாற்றி யகண்டசுக வாழ்வடைவாய் நெஞ்சகமே.

மெய் வாய் கண் மூக்கு செவி எனும் அறிகருவிகள் 5
வாக்கு கால் கை எருவாய் கருவாய் எனும் தொழில் கருவிகள் 5
சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் எனும் தன் மாத்திரைகள் 5
மனம் 1

ஆகப் பதினாறு தத்துவக் கூட்டங்களை நுண்ணுடல் என்பது சம்பிரதாயம்; மேலும், ஏடு என்பது கைவல்ய ஸ்தானம்; பொல்லாத இடம் என்றும் பொருள் கொண்டுளர் முன்னையோர்.

வரதராஜரை வாழ்த்துவது, வாழ்வதற்கு வழி. அதைக் கைவிட்டு, உபாஸனைப் பெயரால் தனி ஒருவர் வாழ்வது தருமமாகாது. யாராயிருந்தாலும் வந்தாரை அழைத்து அவ்வழியில் வாழ வைப்பம்; ஒதுக்கி அவரை உதற மாட்டோம் என்று அருளொடு அழைக்கும் ஆழ்வார் போன்றவரே உண்மை ஆஸ்திகர்கள் என்று அறிகிறோம் அல்லவா!

திரிபுரம்

(V. R. G.)

மிருகக்காக்ஷி சாலையில், சிங்கம், புலி, கரடி முதலிய பிராணிகளை வளர்க்கிறார்கள். அதற்காகப் பிரத்யேகமான ஏற்பாடுகள் உள்ள கூண்டுகள் அமைத்திருக்கிறார்கள். அதில் வளரும் மிருகங்களின் உடல் நலத்தைக் கருதி அநேக வசதிகள் செய்திருக்கிறார்கள் அந்தக் கூண்டின்

விட்டேன் உலகமெனும் வீணான வாசனையும்
கெட்டிலங்கும் அன்னையடி கிட்டுவையோ நெஞ்சகமே

அமைப்பை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். ஒன்று, அவை பகல் நேரங்களில் சுதந்திரமாயும், மனோ உல்லாசத்துடனும் தன் இச்சைப்படி சஞ்சரிக்க ஏற்றதாயுள்ள திறந்த வெளியான இடம்.

இரண்டாவது அவை வெயிலாலும் மழையாலும் துன்புறாமல், அமைதியாக ஓய்வு பெறவும் நித்திரை கொள்ளவும் சௌகர்யமாயுள்ள தூய்மையாயும் பந்தோபஸ்தாயுமுள்ள இடம். மிருகங்கள் சுயேச்சையாய்த் திரிந்தபின் இளைப்பாற எண்ணித் தானாகவே அங்கு வந்து படுத்து உறங்கும்.

மூன்றாவது, அவைகளுக்கு உணவாகிய இரைச்சி, தண்ணீர் முதலியவற்றை அருந்துவதற்காக உள்ள சிறிய அறை. இந்த இடம் மிக சுத்தமானதாயும், தக்க வசதிகள் உள்ளதாயும் இருக்கும். மிருகங்கள் உணவு கொள்ளும் சமயத்தில்தான் அந்த இடத்திற்கும் போகும். உணவு அருந்தியதும் வெளியே வந்துவிடும். உணவானது ஜீவாதாரமாயுள்ளது. இந்த மூன்றாவது அறைதான் ஜீவன்கள் உயிருடன் வாழ மிக முக்கியமானது.

மிருகங்கள் பெரும்பாலான நேரத்திலும் திறந்த வெளியாகிய முதல் கூண்டிலேயே சஞ்சரிக்கும். மிகுதியான நேரத்தில் இரண்டாவது அறையில் வந்து ஓய்வு எடுத்துக் கொள்ளும். உணவருந்தும் சமயம் மாத்திரம் மூன்றாவது அறைக்குச் செல்லும்.

அதேபோல் மானிட உடலாகிய கூண்டிற்குள்ளும் மூன்று பிரிவுகள் இருக்கின்றன. முதல் பிரிவாகிய அறையில்தான் நாம் பெரும்பாலான நேரத்தைச் செலவிடுகிறோம்.

எத்திக்கும் தானாய் இறந்துபிற வாதடைந்தால்
செத்துப் பிறத்தலன்றே தீராதோ நெஞ்சகமே.

ஓய்வுகொள்ளும் நேரம் மட்டும் இரண்டாவது அறையில் தங்குகிறோம். நம் உயிராகிய ஜீவாத்மாவுக்கு புத்துயிராகிய உணவு அளிக்கப்படும் மிகச் சிறிது நேரமே மூன்றுவது அறையில் இருக்கிறோம்.

ஒன்று - ஜாக்கிராவஸ்தையில் ஐம்புலன்களுடன் மனதுகூடி வெளியில் திரிந்து உழன்று இன்ப துன்பங்களையும், விருப்பு வெறுப்புகளையும் இடைவிடாது மாறி மாறி அனுபவிக்கும் நிலை. இந்த நிலைக்கு ஓய்வே இல்லை. மாயையின் செயலால் ஏற்பட்ட மறதியிருந்து காரண காரியங்களையோ, பலாபலன்களையோ சிந்தியாது, இதுவரை நடந்த நிகழ்ச்சிகளை உடனுக்குடன் மறந்து, இனி வரப்போகும் அவற்றை மனதால் உருவகப்படுத்தி, அதில் ஆர்வமும் கவலையும் கொண்டு உழலும் ஜாக்கிராவஸ்தை என்னும் இடம்.

இரண்டாவது நாம் மனதுடன் திரிந்து அலைந்து அடைந்த களைப்பையும், சஞ்சலத்தையும் போக்கிக் கொள்ள ஏற்பட்டுள்ள நித்திரை என்னும் சொப்பனவஸ்தை யாகிய இடம். இந்த இடத்தில் நாம் செயலில் ஈடுபடல் என்பது நின்றுவிடுமே யன்றி மனம் சும்மாயிராது. தான் இச்சைமிகுதியால் ஈடுபட்டுள்ள விஷயங்களில் அலைந்து திரியும். இதைக் கனவு காணுதல் என்பர். இங்கு நம் உடற் கருவிகள் ஓய்வு பெறுமேயன்றி மனதுக்கு ஓய்வு இராது.

நம் தலைவனும் எஜமானனும் நம்மைக் காப்பாற்றும் வேலையில் சதா ஈடுபட்டுள்ளவனுமாகிய திருமுருகன், நம் மனதுக்கும் உயிருக்கும் புத்துயிரும் ஓய்வும் அளிக்க

ஒன்றேடுந் தாக்கற்று உறுதுரியா தீதமதில்
செத்துப் பிறத்தலன்றே தீராதோ நெஞ்சகமே.

எண்ணி மூன்றாவது அறையாகிய சுழுத்தி நிலையை ஏற் படுத்தி யிருக்கிறான். அங்குதான் நாம், நம் உயிருக்கு உணவாகிய சக்தியைப் பெறுகிறோம்.

எப்படி மிருகங்களுக்கு உணவளிக்கும் சமயம் மூன் றாவது அறையின் பக்கம் அதைப் பரிபாலிக்கும் வேலைக் காரன் அருகில் இருந்து கவனித்துக் கொள்வானோ அதே போல நம்மைப் பாதுகாக்கும் காவற்காரனும், பரமாத்மா வாயுமுள்ள திருமுருகன் சுழுத்தியாகிய மூன்றாவது அறையில் நம் அருகில் வந்து, மெய்யுணர்வாகிய உணவை ஊட்டி புத்துயிர் அளித்து நம்மை மகிழ்வித்துத் தானும் மகிழ்கிறான்.

சுழுத்தியாகிய மூன்றாவது நிலையில் நம் மனமானது செயலற்று, பூரண ஓய்வு எடுத்துக் கொள்கிறது. அதனால் புதிய ஊக்கமும் வலிமையும், ஆரோக்கியமும் பெறுகிறது, இந்த ஓய்வு பெறும் வசதியில்லாவிடின் நாம் சில தினங் களுக்குள்ளேயே அழிவுற நேரிடும்.

இந்த மூன்றுவிதமான அவஸ்தைகளாகிய கூண்டுகளை யும் ஆதாரமாகக்கொண்டு சஞ்சரிக்கும் இந்த ஜீவனை, காவற்காரனும் எஜமானனுமாகிய திருமுருகன் அணு வளவு நேரமும் நம்மைவிட்டுப் பிரியாது நமக்கு வேண்டிய காரியங்களைச் செய்து காப்பாற்றி வருகிறார்.

என் மனமே! பெறுதற்கரிய பிறவியைப் பெற்ற நீ, இந்த உண்மையை அறிவின் உதவியால் உணர்ந்து, தலைவ னாகிய திருமுருகனிடம் உன் நன்றியைத் தெரிவித்து, அவன் திருப்புகழை மனதாரப் புகழ்ந்து துதித்து அவன் கருணைக்குப் பாத்திரமாவாயாக.

மெய்யுருவை நாளும் விரும்பா திருந்தஇந்தப்
பொய்யுருவால் பட்டதுயர் போதாதோ நெஞ்சகமே.

சிவனடியார்—4

தரும சீலர்
(ரசபதி)

தலப் பெருமை

நலம் சிறந்தது தொண்டை நாடு. பழம் பதி அத னுள் பல உள. அவைகளுள் ஒன்று கூவம். கூவம் என் பது கிணறு; கிணற்று நீரை வெள்ளம் கொண்டு போகாது அல்லவா? அதுபோல், கால வெள்ளத்தால் அப்பதியின் பெருமை கரந்து படுவது இல்லை. அந்த அருமை கருதி அமைந்த பெயர் அது. கூகம் என்பது கூவம் என்று மருவிற்று என்பாரும் உளர். முப்புரம் எரித்த முதல்வன், அங்கிருந்தே மும்மல கண்டனம் செய்கின்றான். ஆதலின், தெய்வப் பெருமான் எழுந்தருளிய திருக்கோயில், திருவிற் கோலம் என்ற பெயர் பெறும். முப்புரம் எரிக்கப் புறப் பட்ட அமயம், தேரின் சிறந்த கூவரம் சிதைந்தமையின், அப்பதியின் பெயர் கூவரம் என்றாகி, கூவம் எனக் குறு கிற்று என்பாரும் உளர். (கூவம் = ஏர்க்கால்.) கூவம் என்பது தலப்பெயர்; திருவிற்கோலம் என்பது கோயில் பெயர். பரமன் தலமான இப்பதி, சென்னைக்கு மேற்கே முப்பது மைலில் உளது.

மூர்த்தியின் முதன்மை

தீண்டாத் திருமேனித் திரிபுராந்தகர் என்பது அங் குள இறைவர் திருநாமம். வெள்ளியால் செய்த காண்டி,

---

பன்னாளும் காண்பவற்றைப் பற்றிப் படுந்துயரம்
என்னால் இனிச்சகிக்க ஏலாதே நெஞ்சகமே.

குறடுகள் கொண்டே அமலற்கு அபிடேக அலங்காரங்கள் செய்வர் அர்ச்சகர். அண்மையிற் பொய்கை அமைந்திருந்தும், இரண்டு கல் தூரம் கடந்து, ஆற்று நீரைக் குடத்துள் கொண்டு வந்தே அபிடேகம் நடைபெறுகின்றது. வைதிகர் ஒருவர், சீலையால் வாய்கட்டிச் சென்று வாய்மையுடன் நீர் கொண்டு வருவர். அவரை இடைவழியில் காண்போர், வெகு தூரம் விலகி வழிவிடுவர். இஃது இன்றும் உள்ள செய்தி.

அதிக மழையெனில், பரமர் திருவுருவில் வெண்ணிறம் படரும்; மழையில்லையெனில், கடுங்கருமை காட்டும்; பெரும் போர் எனில், செந்நிறம் மேனியிற் சேரும். அற்புத இவைகளை அறிந்து,

'ஐயன் நல்ல அதிசயன்'

என்று திரு ஞானசம்பந்தர் திருவாய் மலர்ந்தருளியுளர்.

வழிபடும் வாழ்வு

அருமை அப்பதியில் வாழ்ந்தவர் ஒரு அந்தணர். தயை மிக்க அவர் பெயர் தருமசீலர். பெருஞ்செல்வம் பெற்ற அவர், வைதிக செல்வமும் வாய்த்தவர். ஆகம விதிப்படி திரிபுராந்தகரை ஆராதிப்பார்; முடிந்த நேரமெல்லாம், முதல்வன் புராண முழக்கம் செய்வார்.

சொற்பொழிவு

பாம்பு என்று எண்ணித் தாண்டுவதும் பழுது; பழுதையென்று எண்ணி மிதிப்பதுவும் பாவம். இங்ஙனம் வரட்டல் செய்யும் லௌகிக வாழ்க்கை. ஆற்றோடு ஆறு

என்னுள் சிவவடிவை யான்மறந்(து) அன்றுமுதல்
உன்னோடுங் காண்பவற்றை யுற்றுழன்றேன் நெஞ்சமே

அலைமோதிச் சென்றாலும், நக்கித்தான் நீர் பருகும் நாய். அதுபோல் செல்வம் சிறந்தவரும், வளர்ந்த இன்பங் கண்டு வாழ்ந்ததில்லை. வறுமையரும் வாழார்து வீழ்ந்ததில்லை. இஃது என்றும் உள்ள இயல்.

வாழ்க்கையில் அகத் தூய்மை வளரவேண்டும். அந் நிலையில், இயற்கையே உள்ளத்தில் இரக்கத்தை உண்டாக்கும். இரக்கம் ஈகை உருவாகி எழும். அது கண்டு மலரும் அருள்.

உள்ளம் அந்த அருள் கண்டு உருகும்; உணர்ச்சி வெள்ளம் கரை புரள, பக்தியுருவாகி அது பரிமளிக்கும். இந் நிலையில் இறைவழிபாடு இனிது நிகழுமேல், வளர்ந்து பெருகும் அமைதி வாழ்வு. வாழும் உள்ளொளியை இங்ஙனம் வளர்க்க வேண்டும். அதற்கு மாறாகி, ஊனுடலை வளர்த்தலால் ஒரு பயனும் இல்லை. இது தர்மசீலருடைய சொற்பொழிவின் முகவுரை.

அங்கிருந்து சிவபுராணச் சொற்பொழிவு ஆரம்பமாகும். ஆனந்தக் கண்ணீர் அருவியெனப் பெருக, சிரவணிப்பார் சித்தம் சிவமயமாய் நிற்கும். ஆ! என்ன அருமை!

தானத் தழைப்பு

அவர் இல்லத்தில், விமலன் அடியவர் வேளை தவறாமல் வருவர்; யாத்ரிகர்கட்கு எல்லாம், தரும சீலர் மாளிகையே தங்கும் இடம். அவர் இல்லத்தில், அன்னதானமும் ஆடையளிப்பும் இடையறாமல் தொடர்ந்து நடைபெறும். அவர்க்கு வாய்த்த மனைக்கிழத்தி, ஒரு மாசிலாத

இற்றைவரைக் காண்பவையை யெய்தியெய்தி என்னசுகம்
பெற்றனை சேர்ன்னுலறியாய் பேதமல நெஞ்சகமே.

மாணிக்கம். அவர் பெயரும் அதுதான். கணவர் பணியிற் சலிப்பின்றிக் கலந்துகொள்ளும் பாக்யவதி. பயனை பதி விரதை. அவரைப் பார்த்தாலும் நம் பாவம் பறந்தோடும்.

வானத்தடை

நலம் சிறந்த அத்தம்பதிகளின் தானம் கண்டு நாணி னவோ, திருவருட் சோதனையோ, என்னவோ யார் அறிய முடியும்? ஓடி மேகங்கள் எங்கோ ஒளித்தன. நான்கு ஐந்து ஆண்டுகளாக மழையே இல்லை. வாழும் பயிர்கள் வாடின. வறுமை எங்கும் வளர்ந்தது. பஞ்சத்தால் மக்கள் எங்கும் பரிதவித்தனர். உணவின்றி, உடையின்றி எவரும் உலறும்படி, கோரமான பஞ்சம் கொக்கரித்து எழுந்தது.

கொடை நடை

தருமசீலர் மனம் இது கண்டு தவியாய்த் தவித்தது. பல்லோர்க்கு, உவந்து நெல்லை வாரி உதவினர். அடுத்து வந்தவர்க்கு அரிசியாக அளித்தார். கோடிக் கணக்கில் ஆடைகளை வாங்கிக் கொடுத்தார் இவ்வகையில் வாரிப் பணத்தை வழங்கினர். திகழ்ந்த பொருள் எல்லாம் தீர்ந்த பின்னர், விளை நிலங்களை விற்று உதவினர். பதியின் பணி யிற் பங்கு கொண்ட பத்தினியார், இருக்கும் நகைகளை யெல்லாம் எடுத்துக் கொடுத்தார். அவைகளை விற்று முத லாக்கி, வருந்தி நலிபவர்க்கெல்லாம் வழங்கினர். இச் செயல் கண்டு, அந்நாளில், தொண்டை நாடு முழுதும் அவரைத் தொழுது துதித்தது.

எல்லாம் இறந்ததிரு நெல்லை யிணையடியைப்
புல்லஅகம் நிதமும் போகாவோ நெஞ்சகமே.

சோதனைச் சுழல்

உள்ளதெல்லாம் ஒழிந்தபின், தருமசீலர் குடும்பம், சுடும் வறுமையின் சுவையை யறிந்தது. மாபெரும் அவ ருடைய நிலையுணர்ந்து மனம் வருந்தினர் மக்கள். எனி னும், வறுமையாளர்க்குத்தான் பெருமித உணர்வு பிறப்ப தில்லையே. அதனால், அவரை மேலும் அணுகினர்.

தனிப்பெருஞ் சிறப்புடையது தருமம். பிட்சை எடுத் தேனும், பிறர்க்கு உதவுவது என்று துணிந்தது மனம். நித்திய வாழ்க்கையே அவ்வழியில் சிலநாள் நிகழ்ந்தன. வர வர, அரைநாள் சுற்றினும் அரை ஆழாக்கு அரிசியும் அகப்படவில்லை: கையேந்தி வந்த பலர், வாடும் அவர் நிலை கண்டு வருந்தினர். அவரை மேலும் வருத்துவது அநியா யம் என்று அஞ்சி அகன்றனர்.

எட்டு நாளாகப் பட்டினி. வயிற்று வழிபாடு மடங்கிய தெனினும், இறை வழிபாடு மட்டும் இனிது நடந்தது. ஒன்பதாம் நாள் பகல், வழிபாட்டை முடித்துத் தளர்ந்து தள்ளாடி மீண்ட தருமசீலர், மாளிகை வாயிலை யடைந்த தும் மடங்கி விழுந்தார்.

ஐயா! காதடைக்கிறதே! கண்ணிருண்டு போகிறதே! சிவா! சிவசிவா!! என்று கீச்சிட்டது ஒரு குரல்.

திடுக்கிட்டது நெஞ்சம். தன் தளர்வை மறந்த தரும சீலர், வெடுக்கென்று எழுந்தார். நீறணிந்த, உருத்ராக்க மாலை புனைந்த, பழுத்த சிவனடியார் ஒருவர் பதைப்பொடு வருவதைப் பார்த்தார். நொடித்த மனம் துடித்தது.

வித்தைச் செருக்கடைந்து வீணாள்கழிக்குமருள்
புத்திக் குருடர்நெறி போகாதே நெஞ்சகமே.

இனிது விரைந்து எதிர்கொண்டார்.ஸ்வாமி! வரவேண்டும் என்று புனித அவருடன் மாளிகையுள் புகுந்தார். பட்டினித் தவிப்பை மறந்து, உவந்து எதிர்கொண்ட மனைவியிடம் அடியவரை ஒப்படைத்தார். மீட்டும் ஒருமுறை முயன்று பார்ப்போம் என்ற துணிவுடன், பிட்சைப் பாத்திரம் ஏந்திப் புறப்பட்டார். பரமன் அடியார் பசி நிலையை, என் பாவக் கண்களால் பார்க்க நேர்ந்ததே என்று, பதைக்கிறது மனம். பெருகியது கண்ணீர்.

கலங்கி வரும் தருமசீலரைக் கண்ட சிலர், இவர்க்கா இந்நிலை என்று பொருமிப் புலம்பினர்; தம் மனவேதனையைப் புலப்படுத்தாமல், தமக்கிருந்த அரிசியில் ஒவ்வொரு கை அள்ளி யிட்டனர். இதற்குமுன் இந்த சலுகையும் இல்லை யல்லவா! அரை நாழிகைக்குள் படி அரிசி இப்படி அகப்பட்டது. மகிழ்ந்த தருமசீலர், திரும்பி மாளிகையை யடைந்தார்.

அரிசியை மனைவியிடம் அளித்தார். தூய அடியவரை உண்பிப்பதில் பதிக்கிருந்த துடிப்பைக் கண்டு, மாபெருந் தன் அயர்ச்சியை மறந்த மாணிக்க வல்லியார், ஏதோ ஒரு வாறு முயன்று திருவமுதைச் சித்தப் படுத்தினர்.

களைத்திருந்த கண்ணுதல் அடியார், அன்பொடு பரிமாறிய அன்னத்தை உண்டார். வாயார வாழ்த்தினர். வருகிறேன் என்று ஆசி கூறி அகன்றார். அன்பொடு தம்பதிகள், எஞ்சியதை ஆர்வத்தொடு உண்ண அமர்ந்தனர்.

தீண்டா மேனித் திரிபுர தகனு! மூண்ட பசி குடரை முறுக்குகிறதே! ஐயோ! என்ற அலறல், தெரு வாயிலில் கேட்டது.

நிழல்நெருப்பாய்க் கண்ட நினைவு தவிராதே
விழலுக்கு நீரிறைக்கும் வேலையுற்றாய் நெஞ்சகமே.

தாங்க முடியாத பசியால் தடுமாறும் தருமசீலத் தம்பதிகள், இக் குரலைக் கேட்டு, அரிய மன வேதனையை அடைந்தனர். சிவா! சிவா!! என்று தருமசேனர் சிரித்தார்.

தேவி! இம்மை மறுமைகளை அளிப்பவன் இறைவன். அன்பொடு எண்ணுவார் காயமே அவனிருக்கும் திருக் கோயில். வழுவா அன்பின் வாழ்வார்தம் புறக்கண்கள் கண்டு புளகிக்க, அடியர் உருவில் அம்மான் வருவன் என்று புகல்கின்றன புராணங்கள். நல்லவேளை. இருக் கும் இந்த உணவை, உண்ணுமுன் வந்தார் இவ்வடியார் என்றார் தருமசீலர். உண்மையே உண்மை யென்றார் அவருடைய உயர்ந்த தேவியார்.

இருவரும் வெளி வந்தனர். வந்த அடியரை வணங் கினர். வீட்டுள் அழைத்துச் சென்றனர். பரம அன் பொடு,பயன்பெற இருந்த உணவை அப்படியே பரிமாறினர்.

அதன் பின், நிற்க முடியவில்லை. தருமசீலர் கால்கள் தடுமாறுகின்றன. தேவியார் சிரம் சுழல்கிறது. மாபெரும் அயர்ச்சியை மறைத்து, சால்பு காத்து இருவரும் சுவற் றில் சாய்ந்தனர். சித்தம் சிவத்தைச் சிந்தித்தது.

அம்மா! என்ற ஒரு தெய்வக் குரல் அந்தரத்தில் எழுந்தது. அதே சமயத்தில், உண்ண இருந்த அடியவர் உருவம், விர்ரென்று விண்ணில் எழுந்தது. ஓரே ஒளி வெள்ளம். விடைமேல் தேவியுடன் விற்கோல நாதர். அற்புதமாக இருக்கிறது அந்தத் தரிசனம். ஆ! என்று அலறிய தம்பதிகள் அஞ்சி வணங்கினர்.

நாரியிலம் பூமிதனம் நாசமுறும் என்றவெலாம்
வாரியினிற் பெய்த மழையான நெஞ்சகமே.

வருந்த வேண்டா; உங்கள் உண்மைத் தொண்டை உலகம் அறிய, நடந்தது இந்த அருள் நாடகம். ஒவ்வொரு நாளும், குடநெல் உமக்குக் கோயிலில் கொடுப்பம்; கொள்க என்றருளி, கண்ணுதல் திருவுருவம் கரந்தது.

அயர்ச்சி அகன்றது. இவ்வளவும் உனது அருளாட லோ அத்தா! என்று தம்பதிகள், ஆனந்தக் கண் மழை பொழிந்தனர். கோயிலுக்கு ஓடி எம்பெருமானைக் கும் பிட்டெழுந்த தரும சீலர், பலிபீடத்தருகில் செந்நெல் குடம் இருத்தலைக் கண்டார். உள்ளம் உவந்தார். எம் பெருமான் கருணை கண்டு இறைஞ்சினர். அதைத் தாமும் பயன்படுத்தி, எஞ்சியதை மற்றவர்க்கும் வழங்கி மகிழ்ந் தார்.

செந்நெல் வைத்த நாதர் திருவருளால், மேகங்கள் முழங்கின. நாடு முழுதும் நல்மழை பெய்தது. ஏரிகுள மெலாம் நிரம்பியது. நிலங்கள் வளம் கொழித்தன. வறுமை யகன்று வாழ்ந்தது உலகம். செந்நெல் குடம் பெற்றுச் சிவனருள் போற்றிய தருமசீலத் தம்பதிகள், பல காலம் பயனுன பணியாற்றி மகிழ்ந்தனர். நாள் பல நடந்தன.

திருவாலங்காட்டுத் தாண்டவத்தில் தோற்ற தருக்க காளியை, வாழ்விக்கும் ரட்சா நடனம் நாடோறும் கூவத்தில் நடைபெறுகின்றது; இன்ப ஆடல் செய்யும் அந்த வளர்சடைக் கூத்தர் திருவடி நிழலில், அன்புமிக்க தருமசீலத் தம்பதிகள், மாசிலா இன்பங் கொண்டு மகிழ்ந்தனர். அருளொடு வாழ்க அடியவர்!

ஓயா துழலுமதி ஓய்வதிலை யுன்றனக்கு
வாயாற் பிதற்றமதி வந்ததென்னே நெஞ்சகமே,

மூர்த்தி நாயனர்

(கி. வா. ஜ.)

(109ஆம் பக்கத் தொடர்ச்சி)

எல்லா வளங்களும் நிரம்பித் தமிழும் தென்றலும் இனிமை செய்து பரவும் பாண்டி நாட்டின் தலைநகரம் மதுரை. அங்கே வணிகர் குலத்தில் தோன்றியவர் மூர்த்தி யார். இறைவனிடம் முறுகிய அன்பும் திருநீறும் உருத் திராட்சமுமாகிய சிவ சின்னங்களை அணிவதில் பேரார்வம் உடையவர்.

வணிகப் பெருங்குலத்தில் பிறந்த செல்வராலும், தம் உடல் வருந்தி இறைவனுக்குத் தொண்டுபுரிய வேண்டு மென்னும் ஆசையினல், ஒவ்வொரு நாளும் ஆலவாய்ச் சொக்கேசன் திருக்கோயிலில் சந்தனக் கல்லில் சந்தனம் அரைத்து இறைவன் திருக்காப்புக்கு அளித்து வந்தார். இந்தத் திருப்பணி ஒருநாளும் முட்டாமல் நடைபெற்று வந்தது.

அக்காலத்தில் பாண்டிய மன்னன் தக்க வலிமையுடை யவனக இல்லை. அதனல் கருநாட மன்னன் ஒருவன் பாண்டி நாட்டின்மேற் படையெடுத்து வழுதியை வென்று அந்த நாட்டைக் கைப்பற்றினன். மதுரை மாநகரில் கரு நாட அரசன் இருந்து ஆளத் தொடங்கினன்.

அவன் சமண சமயத்தைச் சார்ந்தவனதலால் சமணர் கள் பலரைக் கருநாடக நாட்டிலிருந்து வருவித்தான். சமண குருமார்களுக்கு மதிப்பளித்தான். சைவர்களைப் புறக் கணித்தான். சிவனடியார்களுக்கு அவனும் அவனைச் சார்ந்தவர்களும் பல இடையூறுகளைச் செய்தனர்.

கண்படையுஞ் சாக்கிரமுங் காணத் துரியநிலை
பண்படைவ தென்றே பகராய்நீ பைங்கிளியே.

மூர்த்தி நாயனாரையும் பல அல்லல்களுக்கு உட்படுத்தினர். அவருக்கு வேண்டிய பொருள்கள் கிடைக்காதபடி செய்தனர். என்ன அல்லல் வந்தாலும் ஆலவாய் இறைவனுக்குச் சந்தனக் காப்பு வழங்கும் திருத்தொண்டினின்றும் அவர் பிறழவேயில்லை.

ஒருநாள் சமணர்களுடைய சூழ்ச்சியினால் அவருக்கு எங்கும் சந்தனக் கட்டை கிடைக்கவில்லை. பகல் முழுவதும் அலைந்து பல இடங்களுக்குச் சென்று தேடியும் கிடைக்காமற் போயிற்று. அதனால் மனம் நைந்து வாடி இறைவன் திருக்கோயிலை வந்து அடைந்தார்.

அப்போது அவருக்கு ஓர் எண்ணம் தோற்றியது. "சந்தனக் கட்டைதானே கிடைக்காமற் போயிற்று. சந்தனம் அரைக்கும் கை நம்மிடம் இருக்கிறதே. கட்டையை அரைக்க இயலாவிட்டாலும் இந்தக் கையை அரைக்கலாமே" என்று நினைத்தார். உடனே சந்தனக் கல்லில் தம் முழங் கையை வைத்துத் தேய்க்கத் தொடங்கினர்.

அப்படி அரைத்தபோது முழங் கையிலிருந்து ரத்தம் வந்தது. தேய்க்கத் தேய்க்க நரம்பும் எலும்பும் வெளிப்பட்டன. அப்போதும் அவர் கையைத் தேய்ப்பதை நிறுத்தவில்லை. அவர் செய்த செயற்கருஞ் செய்கையை அந்த நள்ளிரவில் எல்லோருக்கும் தாய்போலுதவும் இறைவன் ஒருவன்தான் அறிவான்.

அவன் கருணைக்கடல் அல்லவா? தன்னுடைய அடியாருடைய உறுதியையும் அன்பையும் கண்டு வியந்தான். அவர் கையில் எலும்பு தேயக் குருதி கொப்புளிப்பது கண்டு இரங்கினன். உடனே தன் திருவாக்கினால், "அன்ப, உனக்குத் திங்கு விளைத்த மன்னனுடைய

உள்ளும் புறம்புமனம் உற்றிடும்சங் கற்பசகம்
தள்ளிச் சுகநிலையிற் சாரலென்றே பைங்கிளியே.

அரசை நீ கைக்கொண்டு, திருப்பணியை முட்டின்றிச் செய்து நம்மை அடைவாயாக!" என்ற அருளுரையை எழுப்பினன். அது கேட்ட மூர்த்தியார் வியந்து நின்ருர். அவர் கையில் உண்டாகியிருந்த தேய்வு மாறி சந்தனம் அரைத்த கைபோல மணமும் வளமும் பெற்றது.

அதே இரவில் கருநாட மன்னனுடைய ஆயுள் முடிவுற்றது. திடீரென்று நள்ளிரவில் அரசன் இறந்ததை அமைச்சர்கள் அறிந்து கூடினர். இறந்தவனுக்கு மைந்தன் யாரும் இன்மையினுல், அடுத்தபடி ஆட்சி புரிவதற்கு உரியாரைத் தெரிந்தெடுத்து நிறுவும் பொறுப்பு அமைச்சர்களுக்கு ஏற்பட்டது. பழைய வழக்கப்படி பட்டத்து யானையின் கண்ணைக் கட்டிவிட்டு, அது யாரைத் தன்மேல் ஏற்றிக்கொண்டு வருகிறதோ அவரையே அரசராகக் கொள்வது என்ற முடிவுக்கு வந்தனர் அமைச்சரும் சான்ருேரும்.

பொழுது விடிந்தது. பட்டத்துக் களிற்றின் கண்களைக் கட்டி இறைவன் திருவருளை எண்ணி அமைச்சர்கள் அதை ஏவினர். அக் களிறு நேரே கோயில் வாயிலை அணுகியது. அப்போது மூர்த்தியார் இறைவன் திருவருட் செயலை எண்ணி வியந்தபடியே, "அரசாட்சியை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பது திருவருட் சம்மதமாகுல் அவ்வாறு செய்வதே நம் கடமை" என்று நினைந்து கோயில் வாயிலை அணுகினர். யானை அவர் முன் வந்து பணிந்து அவரைத் தன் பிடரின் மேல் வைத்துக்கொண்டு செல்லத் தொடங்கியது.

யானையின் செய்கையை ஆவலோடு கவனித்துக் கொண்டிருந்த அமைச்சரும் பிறரும், அது மூர்த்தியாரைத்

உன்ன ஒழிதலினுல் உண்டரந்தை யின்பமது
பன்னு சமநிலையிற் பாறலென்ருே பைங்கிளியே.

தாங்கி வருவது கண்டு, அவரை யானையினின்றும் இறக்கிப் பணிந்து திருமுடி தரித்து ஆட்சி புரிய வேண்டும் என்று வேண்டினர். அப்போது மூர்த்தியார், "பழையபடியே சைவ நெறி ஓங்கும்படி நான் அரசாட்சி புரிவேன்" என்றார். "தேவரீர் திருவுள்ளப்படியே செய்தால் அதைத் தடுப்பவர் யார்?" என்று அமைச்சர்கள் பணிவுடன் கூறினர்.

"மணிமுடி தரித்துச் சந்தனம் பூசி அணிகலன் அணிந்து வாழும் அரசு எனக்கு வேண்டாம். இறைவனுடைய திருவருளின் கருவியாக இப்பணியை மேற்கொள்வேன். எனக்கு நீறே சந்தனம்; உருத்திராட்சமே அணிகலன்; சடையே முடி. இந்த மூன்று அடையாளங்களுடன் அரசு கட்டில் ஏறுவேன்" என்று சொல்லவே, உடனிருந்தோர் மனமுவந்தனர்.

சிவ சின்னங்கள் பொலிய மூர்த்தியார் களிற்றின்மேல் ஏறி ஊர் முழுதும் உலா வந்து அரசு கட்டிலில் ஏறினர். உயிர்களிடத்தில் இரக்கமும் அறத்தை வளர்க்கும் ஆற்றலும் சிவனடியாரிடத்தில் மதிப்பும் சிவபிரான் திருத்தொண்டில் ஈடுபாடும் உடைய மூர்த்தியாருடைய ஆட்சியில் பாண்டி நாடு சிவலோகம் போல விளங்கியது.

எல்லாம் திருவருளின் செயலென்று எண்ணி மண்ணும் செல்வத்தைப் பெற்றும் சிவ சின்னமே பின்னும் உயர்ந்தவை என்று மதித்து வாழ்ந்தவர் மூர்த்தியார். என்ன அல்லல் வந்தாலும் தொண்டு புரிவதை மாற்ருத உறுதி படைத்தவர் அவர். மூர்த்தி நாயனர் மும்மையால் உலகாண்ட சிறப்பைப் பெரிய புராணம் மிகச் சிறப்பாகப் போற்றுகிறது.

உள்ள நினைப்புமறப் புற்றிடினோர் தன்வடிவை
உள்ளபடி யுணர வொண்ணுமதோ பைங்கிளியே.

மதிப்புரை

அருளாளன்: ஆசிரியர் கி. வா. ஜகந்நாதையர் அவர்கள்.

சைவத் திருமுறைகளில் ஏழாவது ஆளுடைய நம்பிகள் அருளியது. பொருட் செல்வக் குபேரனைத் தோழமை கொண்ட சிவபிரான், கல்விச் செல்வத் தோழராக சுந்தரரைக் கண்டனர். 'நீ என்னடிமை! பிறர்க் கடிமை ஆகலாமோ என்று வாசக தீட்சையை வலிந்து செய்து, அதன்பின் திருவடி தீட்சையை அமலன் அருளினன். 'அத்தா' உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனலாமே?' எனத் தேவாரம் பாட ஆரம்பித்த சுந்தரர், 'திருத்தித் திருத்தி வந்தென் சிந்தை யிடம்கொள் கயிலாயா' என்று பாடிய படியே இறுதியில் அற்புத கயிலையை அடைந்தார். அவர் அருளிய தேவாரங்களில் ஆழமான பொருள் நயங்கள் அதிகம் உள. அவைகளை எவரும் அனுபவிக்க, ஒன்பது தலைப்பில் சில பாடல் கட்கு உரை விளக்கம் செய்கிறார் கி. வா. ஜ. உரை விளக்கங்கள் உள்ளத்தைத் தொடுகின்றன. இம் முயற்சி, உரை காணப் பதிகங் கட்கும் முயன்று உரைகாணும் துணிவைப் பிறர்க்கு உண்டாக்கும். இவ் விளக்கம் காலத்திற் செய்த உதவி. விலை 1--0—0

அன்பின் உருவம் :—ஆசிரியர் கி. வ. ஜ.

திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாந் திருமுறை. இவைகளை ஒன்பது தலைப்பில் வைத்து, கேள்வி வன்மையாலும், தம் நுண்மாண் நுழைபுலத்தாலும் மிக ஆழ்ந்து ஆய்கின்றார் ஆசிரியர். எப்பக்கம் படித்தாலும் சுவைமிகு நயங்கள். திருவாச கத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்பதை ஆசிரியர் உரைகொண்டும் உணராத உள்ளந்தான் கல். அகப் பொருள் நுட்பங்களையும், கொளுக்களில் உள்ள குறிப்புகளையும் நாநயத்தோடு காட்டும் ஆசிரியர், இப்படியே பிற திருமுறைகளையும் எழுதி உலகிற்கு உதவ திருவருள் துணைபுரிவதாக.

1—0—0

கிடைக்குமிடம்: அமுத நிலையம் லிமிடெட் தேனாம்பேட்டை சென்னை 18

THE SACRED THREAD

When Sri *Manikkavachagar* expounded the divine qualities of the Lord, a question was put by the first two lines of a song, and the answer came in the next two lines.

என்னப்பன் எம்பிரான் எவ்வுயிர்க்கும் தானீசன்
துன்னம்பெய் கோவணமாய்க் கொள்வதுதான் என்னேடி
மன்னுகலை துன்னு பொருள் மறைநான்கும் வான்சரடாய்
தன்னையேதான் கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ

The whole creation hangs on a thread. Heaven and earth are knit together by a sacred thread. Neither can break away from the other. The world of *Prakriti* or matter is governed by the laws of nature. The world of spirit is governed by subtler laws. These two worlds, physical and metaphysical, are welded together by an unseen wonderful chord, that is life. The integrity of the world is the unity of the *All-Life*.
Barathiar sang :—

"உள்ளதெல்லாம் ஒருயிரென்று உணர்ந்தபின்
உள்ளம் குலைவதுண்டோ."

On the day when the dwijas (ie men having two births, the material and the spiritual) renew their Sacred thread, the ritual by which they do it is very informing and interesting. It is a triune

thread that they wear. There is a knot that holds the three threads in order. The knot that sustains is indicative of Brahman or God. The right hand turned heavenward holds the knot. The left hand turned earthward holds down the thread at the point opposite the knot. Invocations are made before it is worn. Purity and dharma lies where earth and heaven are synthesised. A life dedicated and forsworn to that synthesised consistency of life and conduct, would seem to be the principle of the ritual. That thread is the God-thread, the life thread that equates spirit and matter. This principle is emphasised in all religions and is recognisable in the directions given by them. The *thali* or the *mangalyasutram* was tied by *Sri Siva* round the neck of *Sri Parvati*, for the prosperity and peace of the world. *Sekkizhar* would sing:

"முற்றும் மங்கலநாண் சாத்தி
முழுதுல கீன்றுள் செங்கை
பற்றினன் பற்றிலார்க்கே
விடருள் பரமயோகி"

The thread, the holy thread, is not the thread of obstruction to the liberty of the other *Jivas*. It is the thread of self purification, self restraint, self reverance and self knowledge. It is the thread of love, service and sacrifice — the thread of *Ahimsa*. This thread which is worn, is the symbol of God manifesting Himself and permeating the sixty

four sciences or *Kalaigal*, the four Vedas and the high heavens. Continuous thought of God and goodness is ensured by the unfailing presence of a mentor worn on the body and that holy mentor is the sacred thread. What it stands for is the universal, all-pervading spirit of Love & Service that forms the bed-rock of the integrative life of the universe.

It is not the symbol of superiority. It is the standing declaration of the dedicated life.

(Thirppugal Mani)

வஞ்சப்பிறப் பதுவேண்டிலேன், வண்டார்குழல் மடமாதரார்
நஞ்சம்புரை மயல்வேண்டிலேன், நாடும்பல பொருள்வேண்டிலேன்
தஞ்சமென அடைந்தார்தமைத் தளை நீக்கிநல் அருள் ஈந்திடும்
கஞ்சமலர்ப் பதம்வேண்டினேன், கண நாயக ! கண நாயகா !!

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
ஸ்ரீ
நெ. 1506

Regd. M. No. 5390, Amirthavachani (1955 ஆனி - அமிர்தவசனி)

Coffee

Ours for Quality

RAW, ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS), LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூலவீதி - மதுரை

Tel:—"FAITH" Estd :—1924 Phone:—113

அரிய தெய்வ அருள் நூல்கள்

குகஸ்ரீ. பு. பா. ரசபதி அவர்களின் அருமையான
விரிவுரையுடன்

ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அனுபூதி	1	0	0
,, 6 திருவகுப்புகள்	1	8	0
ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்	2	0	0
ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா	2	0	0
திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளி யெழுச்சிகள்	0	6	0
ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா	2	0	0
ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல்	1	8	0
திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்)	0	12	0
கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன்	1	0	0
தேவி பக்தர்கள் (அச்சில்)			
கணபதி பக்தர்கள் ,,			
முருகனடியார் ,,			

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18
Edited & Published by S. Muthuswami, 54, Bunder St., Madras-1.